607

# ஜகன் மோகினி

ஏவிளம்பி ஸ்ரீ ஐப்பசி மீ 1-11-57 25 நயா பைசா


## கலை பேசுகிறது

மலர் 34. இதழ் 11.

607/1-58
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - FEB 19
MADRAS



JL
N57'34'11
18324



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

நவம்பர் 1957. மலர் 34, இதழ் 11. ஏவிளம்பி ஷு ஐப்பசி மீ

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| விபரீதம் வெற்றி பெறுமா? —V.K.பார்த்தசாரதிஐயங்கார் | 1 |
| காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி | 7 |
| காற்றும் இலவமரமும் திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸய்யங்கார் | |
| அன்பு வெள்ளம் —வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன் | 13 |
| மதிப்புரை வி. கே. பா. | |
| வை. மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு.விஜயலக்ஷ்மி | 289-308 |
| கலை பேசுகிறது சமய சஞ்சீவி —சாரக்ராகி (ராப்பர் பக்கம் 2) | |



## சமய சஞ்சிவி

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு திருவல்லிக்கேணி வெங்கடாசலம் செட்டித் தெருவில் நடந்து வந்த சங்கீத சபாவில் ஒரு மகத்தான திறமை வாய்ந்த இளம் வித்வானின் கச்சேரி நடந்தது. 'எள்ளு போட்டால் எள்ளு விழாது' என்றால் அது மிகையே இல்லை. அந்த வித்வான் சங்கீத மேடை ஏறும்போதே ஜனங்களுக்கிருந்த உத்சாகமும், தம்மை மீறிய ஆனந்தமும் சொல்லில் அடங்காது. அதை கரகோஷங்களினாலும். இன் சொல்லாலும், புன்சிரிப்பாலும் காட்டி வித்வானுக்கு அபரிமிதமான குஷியை உண்டாக்கினார்கள்.

அன்றும் வழக்கப்படி கீர்த்தனை உருப்படிகள் எல்லாம் முடிந்து கல்யாணிராகம் பல்லவிக்காக வெகு அற்புதமாய் பாடிக் கொண்டிருந்தார். ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும் நிசப்தம் இருந்த இடத்தில் கொஞ்ச கொஞ்சமாய் சள சளவென்று பேச்சுக் குரல் பலத்து சங்கீதத்தில் கவனம் குறைந்து பத்திரிகைகளை புரட்டும் பரபரப்பு மிகுந்து திடீரென்று ஒருவிதமான சிறிய கிளர்ச்சிபோன்ற தோற்றம் உண்டாகிவிட்டது. அபாரமான வித்வானுக்கு தக்கபடி பிடில் காரரும், மிருதங்ககாரரும் பெரிய ஜமாவாக அமைந்து இருந்ததால் பல்லவிக்கான கல்யாணிராகம் ஒவ்

# விபரீதம் வெற்றி பெறுமா?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதிஅய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

### சமதர்ம சமூகத்தின் அஸ்திவாரமா இப்பிராமணர் ஒழிப்பு?

இவ்வருஷத் தீபாவளிக்கு முன்னரே பட்டாசு ரெயில்கள் தீப்பற்றிப் பலசேதங்கள் விளைவித்தன. தீபாவளி முந்திய தினத்தன்று, திருச்சிராப்பள்ளித் தலத்தில் திரு. ஈ. வே.ரா, அக்ரகாரங்களைக் கொளுத்தியும், பிராமணர்களைக் குத்திக் கொன்று, அவர்கள் இரத்தங் கொண்டுத் தங்கள் தமிழகத்தைச் சுத்தி செய்து புனிதமாக்கிக் கொள்ளவும் திட்டமிட்டுத் தொண்டர் கூட்டிச் செயலாற்றலும் ஆரம்பித்து விடுவதாகச் சொல்லியுள்ளார். ஐயோ தமிழ் அன்னாய்! இந்தியப் பிரதம மந்திரி, தேசந்தேசமாய்ப் பேசிப் போகும் பஞ்சசீலக் கொள்கைகளைத் தன் நாட்டில் அனுஷ்டித்துக் காட்டும் வகையோ இது!—அவர் பிரயாசைப்பட்டு ஸ்தாபித்திட உழைக்கும் சமதர்ம சமூகக் கட்டிடத்தின் அஸ்திவாரமோ இப்பிராமண ஒழிப்பு?—

பிராமணர் யார்?—இவர்கள் தமிழரல்லவா?—பிராமணர் வேறு. அஃதல்லாத ஹிந்துக்களே தமிழர், என்ற பாகுபாட்டை, மித்ரபேதம்செய்து, பிரித்துக்கெடுத்து பலம் பெற்று ஆட்சி செய்த ஆங்கிலேயனும் இவ்வளவு பகிரங்கமாகக் கூறவில்லையே! அந்த மித்திரபேதவாதியை ஒழித்துச் சுதந்தரம் பெற்றும், ஹிந்துத் தலைவர்கள், தாம் தாம் புகழும் பதவியும் பெற, விரோதியும் அஞ்சிய மாபாதகச் செயல்களைப் பகிரங்கமாகப் பேசிச் செயலில் அனுஷ்டித்துக்காட்டவும் முந்துகிறார்களே!-இப்படிச் செய்வோமென்றோர் கொண்ட சமூகத்தையும் ஓர் அரசு, நல்லரசாயிருந்து ஆண்டு நிலைக்கக்கூடுமா?—

### பிராமணரும் தமிழர்தான்: தமிழரும் பிராமணரே அன்றோ?

ஆரியர் யார்?—தமிழர் எவர்?—யாவரும் ஹிந்துக்களேயல்லவா?—வேத மதத்தினரே யல்லவா?—வேதம், ஆரியர் என்ற ஒரு வகுப்பாரது என்ற அடிப்படை மித்திரபேத போதனையன்றோ இவ்வளவு அனர்த்தத்திற்கும் அடிப்படை காரணம். வேதம் ஆரியரதுமல்ல; சமஸ்கிருதிகளதுமல்ல; தமிழரதுமல்ல: ஏசு மதம் போலவும், முகம்மது மதம் போலவும், மற்றைய இதர மதங்கள் போலவும் எந்த மனுஷ்யப் பிரகிருதியாலும் வெளியிட்டு எழுதப்பட்டதல்லவே. எழுத்துக்கும் பாஷைக்கும் கட்டுப்படாத ஈச்வரனிடமிருந்து வெளிப்பட்ட ஒலியே யன்றோ ஆதி வேதம்: ஓதப்பட்டு

வந்த இந்த வேதம், எழுத்தும், பாஷையும் அறியப்பட்ட பின்னர் சமஸ்கிருதமாகவும், தமிழாகவும், இதர பாஷைகளாகவும் பிரிந்து வழங்கப்பட்டல்லவா வருகிறது'—பிராமணரும் தமிழர்தான். தமிழரும் பிராமணரே—யாவரும் வேத மதத்தினரே யன்றோ! ஆரியமும் செந்தமிழும் வேதத் தீபத்தினின்றும் எடுக்கப்பட்ட பாரதீய பாஷைச் சுடர்களல்லவா! இந்த உண்மைப் பண்பாடறியாது, பிராமணர் வேறு, தமிழர் வேறு என்றும், இருவரும் ஜன்ம விரோதிகளென்றும் பிரசாரஞ் செய்தும், ஒருவரையொருவர் குத்திச் கொன்று மகிழச் செயலாற்ற முன்வருவதும் நாகரீகமிக்க இருபதாம் நூற்றூண்டில், அஹிம்ஸா மூர்த்தி, கத்தியின்றி, ரத்தமின்றிப் பெற்றுக்கொடுத்த சுதந்திரக் காங்கிரஸ் ஆட்சி கீழ் வாழும் குடிமக்கள் செயலா? இதைச் சரித்திரத்தில் எழுதி வைத்தாலும், பின்னோர் நம்பமாட்டார்களே!

**கலியையும் விஞ்சியதான ஆட்சி முறையா**

ஈ. வே. ராவின் இத் திருப்பணி எதற்காக ஏற்கப்பட்டது தெரியுமா?—அசுரர்களைப் பிராமணர்கள்தாம் கொன்ரூர்களாம். அதற்குப் பிரதியாக ஈ. வே. ரா தமிழர், பிராமணர்களைக் கொன்று பழி தீர்த்துக்கொள்ளப் போகிரூர்களாம்! எவ்வளவு லோகோபகாரமான கைங்கர்யம்! அசுரர்கள் யாவர்?—ராவணன் அசுரனல்லவா?—அவன் பிராமணனுயிற்றே!—அவனைக் கொன்றது க்ஷத்ரயனல்லவா!—பூசுரர் என்று பிராமணரை வழங்குவதால், அவர்களைச் சுரர்களென்றும், அவரல்லாதாரை அசுரர் என்றும் வகுத்து விட்டார் போலும் ஈ. வே. ரா—.

அசுரர்களுக்காக ஏங்கி அவர்கள் அழிந்ததற்காக வருந்திப் பழி தீர்த்திட, அசுர ஆப்தர்களாய் முன் வந்துள்ள ஈ. வே. ரா தமிழத் தொண்டர்கள், ஏழைப் பிராமணர்களையும், அவர்களது அக்கிரகாரங்களையும் எரித்துத் தீக்கிரையாக்கப் போவது, சாது நிக்கிரகஞ் செய்து, அசுர பரிபாலனம் செய்வது கலியையும் விஞ்சியதான ஆட்சி முறையின் ஒப்பிலா எடுத்துக்காட்டாகவே விளங்குகிறது!-

**விஷப்பரிட்சை செய்யும் சமயமா இது?**

சுதந்திர இந்தியாவில், சென்னை மாகாணத்தில், அசுர சமூகமே வேரூன்றி வளரப் பாடுபடப் போவதாக ஒரு தலைவர், தன் கீழ் தொண்டாற்றும் பல திருத்தொண்டர்களைத் திரட்டிப் பகிரங்கமாகச் செயலாற்றுவாராயின், சுதந்திர இந்தியாவின் பண்பாட்டுப் பெருமையும், இந்திய அரசாங்கத்தின் செங்கோல் மேன்மையும், கலிகாலக்

183244

கோலாகல எடுத்துக்காட்டாகத்தான் பிறநாட்டாற்கு நன்கு விளங்கும்! பிள்ளையாருடைத்ததும், ராமனை எரித்ததும், காந்திச் சிலையுடைப்பதும், பிராமணர்களைக் கொளுத்துவதும் இந்திய அரசாங்கம் ஆதரிக்கும் காங்கிரஸ் கட்சிக் கொள்கைகளா?— அல்லது சகித்து வளர்க்கும் சகிப்புப் பெருமையா? சென்னை மந்திரி சபை இருந்துமா? இம்மாதிரிப் பிராமணத்துவேஷப் பகிரங்கப் பிரசாரங்கள்? என்று பல நாட்டாரும் பல மக்களும், மனம் புழுங்கி வருந்தி ஏங்க வழி வகுத்துப் போகிறதே இம் மாகாண அரசு. மாகாணப் பிராமணர்களை ஈ. வே. ராவின் அசுர அன்பர்களிடம் காணிக்கையாக ஒப்படைத்து, அவர்களை அவர்கள் எரித்துக் கொளுத்துவதைக் கண்டு, சட்டம் இடங்கொடுக்கவில்லையே யென அழுதவண்ணம் வாளாயிருக்கப் போகிறதா சென்னை மந்திரி சபையும், இந்தப் பிராம்ணர்களது வாக்குரிமையைப் பலவேறு வாக்குறுதிகள் கொடுத்து வாங்கிச் சட்டசபை புகுந்து மனச் சாட்சி விற்றுப் பதவியேறியுள்ள அரசாங்க அதிகாரிகளும்?'' "முக்கோடி மக்களில் மூன்று லக்ஷமேயான பிராமணர்களைக் கொளுத்தி யெரித்தால், உலகமே எரிந்துபோய் விடுமோ. இதிலென்ன பிரமாதம்?"—என்று ஈ. வே. ரா சொல்வதைப் போலவேதான் நமது அரசாங்கமும் இத் தீச்செயலைக் கண்டியாது, விஷமப் பரீக்ஷை நடந்தேறவிட்டு வேடிக்கைப் பார்க்கிறதோ?— சுதந்திரக் குடியரசைப் பெற்றுக் கொடுத்த காந்திமகான் அடியார்களா இன்று நம்மை ஆண்டுவருவது?—காங்கிரஸ் கட்சியின் கொள்கை நிலை இவ்வாறு உலகறியப் பாழ்படுத்திப் பிரசுரம் செய்யப்படவேண்டும்! காந்திமகான் இன்று, உயிருடனிருந்து, பிராமணர்— தமிழர் என்ற இப் பிளவையும் பகையும், அதனை ஒழித்திட முன் வாராது பார்த்து நிற்கும் காங்கிரஸ் கட்சியின் மனப்பான்மையையும், காண்பாராகில், அவர் மனம் என்ன படுபடுமோ!—காந்திமகான் இன்று வாழ்ந்திருந்தாலும், காங்கிரஸ் ஆட்சியினர், பிராமணர்களைக் கொளுத்தி அக்கிரகாரங்களை எரிக்கும் தமிழ்த் தொண்டர்களை அப்படிக்கே விடுத்துத் தான் வாளாயிருப்பாரெனவே இன்று நடந்தேறும் சம்பவங்கள் நினைக்கத்தான் செய்கின்றன.

தமிழகத்தில், தென்பாண்டிய நாட்டில், ராமநாதபுரம் ஜில்லாவில், முதுகுளத்தூரிலுண்டாகிய கலக விளக்கமும், அதன் வினையாய் அரசாங்கம் முத்துராமலிங்கத்தேவரைச் சிறைவைத்துள்ளதும் அக்கிரகாரங்கள் தீப்பற்றி யெரிய சென்னை மந்திரிசபை அதை அவிற்க முடியுமா முடியாதா

யென சட்ட ஆராய்ச்சி செய்வதாக ஸ்ரீ பக்தவத்சலமவர்கள் பிராமணர்களுக்குத் தேறுதல் கூறியிருப்பதும் புண்ணில் புளி பெய்வதாகவே காண்கிறது. இவைகளின் மர்மமும் இன்னமும் வெளிப்படவில்லை. குமுறிக் கொண்டிருக்கும் இக் கலகத் தீயே காங்கிரஸின் நிலைமையைப் பெரிதும் மாசுபடுத்தி யுள்ளது. காங்கிரஸ் ஆட்சியின் மனோதத்துவ நிலை, அதிக ஆட்டங் கொடுத்தே வருகிறது காங்கிரசைவிட ஆதரவிற்கு. இம் மாகாணத்திடை—. இதனிடையே இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தை, எம் முறையாலேனும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற கவலை, மத்திய சர்க்காரையும், அதன் கீழுள்ள மாகாண சர்க்கார்களையும் பீடித்து, அல்லல்படுத்தி ஆட்டிவைக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கதி என்ன?

அமெரிக்கா சென்ற ஸ்ரீ டி. டி. கே. தனக்கு என்ன கிடைக்கப்போகிறதென்பதை அறியமாட்டாமலே திரும்பியுள்ளார்-. ஜப்பான் சென்ற நேருவும், ஐந்தாண்டு திட்டத்திற்கு வேண்டிய நிதி திரட்டும் வகையிலேயே கண்வைத்துப் பேசி, திரட்டி வந்தது யாதென அறியக் கூடாமலே திரும்பிவிட்டார். ஐக்ய நாட்டுச் சபையில் இந்தியா சார்பாகக் கர்ஜித்து வரும் ஸ்ரீ. வி. கே. கே. மேனனும், திட்டக் காரியத்தில் கண்வைத்துப் பேசியே, பெற்ற பலன் யாதென விளங்காது பேசிப் போகிறார்:—இரண்டாம் திட்டம் நிறைவேற்ற நம்மிடம் நிதியில்லை யென்பது நிதர்சனமாகியுள்ளது. வேண்டிய நிதியைப் பிறர் கடன் கொடுப்பதும் நிச்சயமில்லை யென்பதும் விளங்கிவருகிறது. ஜப்பானையும் ருஷ்யாவையும் அவமதித்து அமெரிக்காவிடம் பேசியும் பலிப்பதாகத் தோற்றவில்லை—. ஜப்பானைப் புகழ்ந்து பாடியும் பலன் பெறப் போவதாக மனக் கோட்டையாவது கட்டவும் அஸ்திவார மேற்படவில்லை—. இந்நிலையில், ஐக்ய நாடுகள் முன், அதட்டியோ கெஞ்சியோ கேட்டா கடன் கிடைக்கப் போகிறது?—திட்டத்தைப் பூர்த்தி செய்விக்க, குடிமக்களுக்கு அதிக அவசியமில்லாத வஸ்துக்களின் இறக்குமதியைக் குறைத்தும், அனவசிய வஸ்துக்களின் இறக்குமதியை அடியோடு தடுத்தும், இவைகளுக்குப் பதிலாகத் திட்டம் பூர்த்தியாகத் தேவையான இயந்திரங்களைத் தருவித்துக்கொள்ளவும் சர்க்கார் விதிவகுத்து, இறக்குமதி குறைத்தும் அகற்றியும்விடப்போகும் வஸ்துக்களின் ஜாபிதா ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்—. இதன் பலனோ விளைவோ இப்பொழுதே அருணோதயம்போலத் தெரிய வருகிறது!—இறக்குமதி தவிர்க்கப்பட்ட வஸ்துக்கள் கள்ள மார்க்கட்டுக்குள் புகுந்து மறைந்து வருகின்றன—தேவை

யற்றதுகளைத் தேவையாகக் கொண்டு பழகிய மக்கள், அஃதின்றி வாழமுடியுமா? ஒரு அணு கொடுத்து வாங்கியதை ஒரு ரூபாயோ அதிகமோ கொடுத்து வாங்கி உபயோகிக்கத்தானே வேண்டும்!—தவிர, அப்படிச் செய்வதும் நவீன நாகரிகப் பண்பாட்டின் ஓர் உச்சநிலைதானே!- குடிவெறியொழிக்க மது விலக்குத் திட்டம் வகுத்தும், குடிவெறி யொழிந்ததா?—கள்ளக்குடியேயன்றோ குடியாளர் பண்பாயுள்ளது.

### ஜோதிட நிபுணனோ, அரசியல் சாணக்கியனோ வேண்டியதில்லை.

வீண் ஹிந்து மதாசாரங்களை யழித்து, அம்மத வகுப்பு வேற்றுமைகளை ஒழிக்கக் கங்கணங்கட்டிய நமது மதப்பற்றற்ற அரசாங்கம், தாமே இதர சமூக வகுப்பு வேற்றுமைகளைப் பெருக்கியும், உண்டாக்கியும் வருவகோடு, துவேஷப் பகைகளைப் பகிரங்கமாக வளரவிட்டு விளையாற்றல் செய்திடக் கண்டு நிற்பதுபோலத்தானிருக்கிறது, இன்றைய சமூக நிலை. இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தை கிருவி, அதைப் பூர்த்தி செய்விக்கக் குடிகள் தமது தேவைகளைத் தியாகஞ் செய்திட உதவும் முறைகளை நமது அரசாங்கம் இன்று கையாளும் வகை—. வேலியில் ஓடும் ஓணானை, வலியப் பிடித்து வந்து, மடியில் கட்டிக்கொண்டு, குடைகிறதே யென்று குறை கூறுவோர் கதைபோலத்தானுள்ளது, கையில் வகையின்றித் திட்டமிட்டுவிட்டு, திட்டம் நிறைவேற்ற இஷ்டத் தியாகம் பலவும் குடிகளிடைத் திணித்து, பிராமணத் தியாகம் ஈ. வே. ரா மூலம் வளரவிட்டு, ஊரூராகக் கடன் கேட்டுத் திரியும் நமது சுதந்திர இந்தியக் குடியரசின் செயலாற்றுதல்கள். அரசு, நிலையறியாது வெறியுற்றோடுமாயின், குடிகள் தாம் அதற்கு அணையிட்டு அடக்கிட முற்பட வேண்டும்—. நமது அரசியல், பொருளாதார, சமூக நிலைமை, இன்னமும் இப்படிக்கே நிலையறியாது நீண்டோடுமாயின், உள்நாட்டுக் குழப்பங்கள் கலகங்களாகி முடியத்தான் வேண்டுமென்று உறுதிகூற, ஜோதிட நிபுணனும் வேண்டியதில்லை; அரசியல் சாணக்கியனும் அவசியமேயில்லை—. இன்று சென்னை சபையில், மந்திரி சபைமீது மக்களுக்கு நம்பிக்கையில்லையென்ற பிரேரேபணை விவாதிக்கப்பட்டது. நம்பிக்கை, பிரதமர் காமராஜர் மீதுதானில்லை, காங்கிரஸ் கட்சி மீதல்ல என்பதும் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டது. இருந்தும், இதர மந்திரிகள், வெங்கடேச்வரன் தீர்ப்பையும் ஜஸ்டிஸ் பி. என். ராமஸ்வாமி தீர்ப்பையும், ஆமோதித்தும், பேசி, ஈ. வே. ரா பேச்சு, நிஜமா, பொய்யா என்பதையும் ஆராய்

வதாகக் கூறி வருகிறார்கள். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர், கட்சிக் கட்டுப்பாடுமீறி இப்பிரேரேபணையை ஆமோதிக்கலாகாதென்றே அச்சுறுத்தாமலே பயமுறுத்தப்படுகின்றனர். எனவே இப்பிரேரேபணையையும் முடிவும் முன்னறியப்பட்டதேயாகி விட்டது. காங்கிரசின் குற்றபோராபத்தைப் போக்கவல்ல உண்மைக் காங்கிரஸ் தலைவர்கள் இன்று இந்நாட்டில் எவருமில்லையா? அக்கிரகாரங்கள் பற்றியெரியப் போகின்றனவே!

"வினை பகை யென்றிரண்டி னெச்சம், நினையுங்கால்,
தீயெச்சம் போலத் தெறும்"






## காளிதாஸர் கனவு

### 11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ரகு எல்லா நூல்களையுங் கற்று வில்வித்தையிலும் வாள் முதலிய எல்லா ஆயுத வித்தையிலும் சிறந்த தேர்ச்சியடைந்தான். பிறகு திலீப மகாராஜன் ரகுவுக்கு மணஞ்செய்வித்து அவனை இளவரசனாக்கினான். அரசன் தொண்ணூற்றொன்பது அச்வமேத யாகங்களைச் செய்தான்.. பிறகு நூறாவது அச்வமேத யாகத்திற்கு முயற்சி செய்து வேள்விக்குதிரையை ரகுவுடன் அனுப்பினான். நூறு அச்வமேத யாகங்கள் செய்தவன் இந்திர பட்டம் அடைய வேண்டியவன் ஆதலால் இந்திரன் அச்சப்பட்டு அக்குதிரையை ஒளித்துவிட்டான். பிறகு ரகுவுக்கும் இந்திரனுக்கும் பெரும்போர் நடந்தது. இந்திரன் அவனை வஜ்ராயுதத்தால் அடித்தும் அது ரகுவுக்கு ஒரு தீங்கையும் செய்யவில்லை. இந்திரன் வியந்து "நீ மகாபுருஷன், குதிரையைத் தவிற வேறு எது வேண்டுமானாலும் கேள்'' என்றான். அப்பொழுது ரகு இந்திரனை நோக்கி "இந்த யாகத்தின் பயனை நீங்கள் என் தந்தைக்கு வரமாக அளிக்கவேண்டும்'' என்றான். இந்திரனும் அப்படியே அருள் செய்தான். சிறிது காலமான பிறகு திலீபன் ரகுவுக்குப் பட்டங்கட்டித் தான் தபோவனத்தை யடைந்து தவஞ்செய்து பரமபத மெய்தினான்.

### ரகுமகாராஜன் சரித்திரம்.

ரகுமகாராஜன் திலீபமகாராஜன் அளித்தச் செங்கோலைக் கதிரவன் அளித்த ஒளியை அக்கினித் தாங்குவதுபோல் தாங்கி விளங்கினான். உலகை யெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆண்டார். குடிகள் மனதை யெல்லாம் தன் அரசாட்சியாலும் அன்பாலும் கவர்ந்தார்.

சிங்காதன மேறிச் சில காலமானபின் ரகு திக்விஜயம் செய்யக் கிளம்பினான். அவன் அப்படி போகும் வழிகளில் காடுகளை அழித்துப் பாலங்களைக் கட்டிப் பாலைவனங்களில் குளங்களை வெட்டி உலகத்தை இன்புறச் செய்தான்.

மருப்ருஷ்டான் யுதம்பாம்ஸீ
நாவ்யா: ஸுப்ரதரா நதீ: |
விபினானிப் ரகாசானி
சக்திமத்வா ச்சகாரஸ: ||

நான்கு திசைகளிலும் சென்று ஐம்பத்தாறு தேசங்களை வென்றது தவிர பாரஸீகம் ஹூணதேசம் முதலிய வெளி நாடுகளையும் வென்றான்: யானைகளையே அணியாக கபிசாநதியில் நிறுத்தி வைத்து அந்த பாலத்தின்மேல் தன் படைகளைப்


பேசும்படி செய்து கலிங்க தேசத்தின் மேல் படையெடுத்து வெற்றி பெற்றான். காவிரியாற்றை தாண்டி தென்னாடுகளை வென்றான். தாம்ரபரிணி நதியைத் தாண்டிசென்ற பொழுது அந்த நாடுகளை ஆண்ட அரசர்கள் பக்கத்திலிருந்த கடலில் உண்டான முத்துக்களைக் காணிக்கையாக அளித்தார்கள். பிறகு மேற்கு வடக்கு திசைகளிலுள்ள நாடுகளைப் படையெடுத்து வணங்கச் செய்தான். காச்மீர தேசத்தில் சிந்து நதிக்கரையில் அவனுடைய படைக் குதிரைகள் களைப்பை நீந்திக் கழுத்துக்களையும் தலைகளையும் ஆட்டியபொழுது அவைகளில் ஒட்டிக் கொண்டிருந்த எண்ணிறந்த குங்குமப்பூக்கள் தரையில் வீழ்ந்தன.

வினீதாத்வ ச்ரமாஸ்தஸ்ய
ஸிந்து தீரவிசேஷ்டணை: |
துதுவுர் வாஜின: ஸ்கந்தாத்
லக்ன குங்கு மகேஸரான் ||

கங்கைக்கரை நாடுகளையும் மலை நாடுகளையும் வணங்கச் செய்தான். எல்லோரும் கப்பங்களைக் கட்டித் தம்மையா கப்பணிந்தார்கள். அதன் பிறகு ரகு விச்வஜித் (உலகவெற்றி) என்ற வேள்வியைச் செய்து அதில் ஸர்வஸ்வ தானத்தை எல்லா பணங்களின் கொடையைச் செய்தான். மேகங்கள் நீருண்டால் மழை பொழிவதற்கே.

ஆதானம்து விஸர்காய ஸதாம்வாரி
முசாமிவ ||

---



**ரிக்ஷாக்காரன்:**—என்னம்மா! நிறைய சாமானுங்க வைச்சுக்கிட்டு நிக்கிறீங்க...வீட்டை காலி செய்துட்டிங்களா...வேற வீடு பார்த்துட்டிங்களா...அல்லாட்டி வெளியூருக்கா?...

பாட்டி:—ஏண்டாப்பா! நான் ஒண்டிக்கட்டை, எதுக்கு வீட்டை காலி செய்யணும். நாலு நாளுக்கு ஊருக்குப்போய் திரும்பிடுவேன்...

**ரிக்ஷாக்காரன்:**—!?

# காற்றும் இலவமரமும்

பண்டிதரத்னம் திருக்கண்ணபுரம் ஸ்ரீ S. ஸ்ரீனிவாஸய்யங்கார்.

(மஹாபாரத நீதிக் கதை. சாந்தி பர்வம் 55-ம் அத்தியாயம்)

---

இமய மலையில் ஒரு பெரிய இலவமரம் இருந்தது. அது அநேகம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே உண்டாகிய மரமாதலால், வானுற ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கிளைகள் வெகுநீளம் நீண்டிருந்தன. பல சிறுகிளைகளோடு இலைகள் அடர்ந்து நிழல்தரவல்லதாய் இருந்தது, இந்த மரம். எனவே வெய்யிலால் துன்புறும் யானை முதலிய பல பிராணிகள் அதன் நிழலில் இளைப்பாறி வந்தன. மரம் எப்பொழுதும் தழைத்துப் பூத்துக் காய்த்துக் குலுங்கிய வண்ணமிருந்தது. சில சமயங்களில் வழிப்போக்கர்களும் அதன் நீண்ட நிழலில் இளைப்பாறுவது உண்டு.

ஒரு நாள் மூன்று லோகங்களிலும் ஸஞ்சாரம் செய்யும் நாரத மஹரிஷி அம்மரத்தைக் கண்ணுற்றார். அது இமய மலையின் மற்றொரு சிகரம்போல் காக்ஷி அளித்தது. "அம்மரம் பலமில்லாத மர வகுப்பில் சேர்ந்தது. இது நெடுநாளாக காற்று முதலியவற்றால் அழியாது எவ்வாறு இந்நிலையை எய்தியது" எனத் தன்னுள்ளே ஆச்சர்யமடைந்த, நாரதர் அம்மரத்தையே பார்த்துக் கேட்கலுற்றார்.

"ஓ இலவ மரமே! நீ எவ்வளவு பெரிய மரமாய் வளர்ந்திருக்கிறாய்! எவ்வளவு பக்ஷி ஜாலங்களுக்கு இடமளித்திருக்கிறாய்! எவ்வளவு ஜீவராசிகள் உனது நிழலில் தங்கிக் களைப்பை நீக்கிக் கொள்ளுகின்றன. பரோபகாரத்திற்கென்றே வளர்ந்திருக்கும் உனது பாக்கியமே பாக்கியம்! ஆனால் நீஇவ்வளவு காலமாகக் காற்றினால் ஒருவிதச்சேதமுமின்றி வளர்ந்து வருவது, எனக்கு ஆச்சர்யத்தை விளைவிக்கின்றது. நீ வாயுதேவனின் நண்பனா? அல்லது அவனிடம் வரம் பெற்றவனா? என்ற சங்கையும் எனக்கு எழுகின்றது. அநேகம் விழுதுகளோடு கூடியதும் நாருள்ளதும் பல முள்ளதுமான ஆல்போன்ற விருக்ஷங்களும் காற்றால் நாசமுறுகின்றனவே. பர்வத சிகரங்களையும் பெரிய பெரிய மரங்களையும் ஆட்டிவைக்கும் வாயு, உன்னை விட்டு வைக்கக் காரணம் என்ன, என்பதை அறிவிப்பாயாக," என்றார்.

இலவ மரம், "மஹரிஷியே! நான் காற்றுக்கு நண்பன் அன்று, பந்துவுமன்று, நான் அவனிடம் வரங் கேட்க வேண்டியவனுமல்லன். எனது பலத்தை அறியாது நீர் இவ்வாறு கேட்டீர். எனது பலத்தில் சொற்ப அம்சமும் வாயுவுக்குக் கிடையாது. பர்வத சிகரங்களை அசைத்தும் பெரிய

ஜ-2

மரங்களை முறித்தும் ஸ்தாவர ஜங்கமங்களை அழித்துக் கொண்டும் வரும் காற்று என்னை ஒன்றும் செய்ய முடிவதில்லை. பன்முறை அதை எதிர்த்திருக்கிறேன். அது கோபம் கொண்டு கிளர்ந்து வந்தாலும் மற்றை மரங்களே அழியும். நான் நெடுநாட்களாக அழிவின்றி யிருப்பதே இதற்குத் தக்க சான்றல்லவா!" என்றது.

அதைக் கேட்ட நாரதர், "இலவ மரமே! உன் நினைவு விபரீதமானதேயாகும். அதில் ஸம்சயம் இல்லை. தேவர்களிலேயே வாயுவைப் போன்ற பலமுள்ளவன் இல்லை. உலகில் எவ்விதப் பிராணிகளும் உயிர்பெற்று வாழவேண்டுமானலும் அவனது கருணையேவேண்டும். இப்படிப் பலம்வாய்ந்த வாயுதேவன் உனக்குப் பூஜிக்கத் தகுந்தவன். அவனை இகழ்வது உனது மதியின்மையையே குறிக்கின்றது. துர்ப்பலனுன நீ துர்ப்புத்தியையும் பெற்றிருப்பது வருந்தத் தக்கது. சந்தனம், அகில். தேவதாரு முதலிய வயிரம் பற்றிய மரங்களும் வாயுவை இவ்வாறு அவமதித்ததில்லை. அவை தங்கள் பலத்தை உணர்ந்திருக்கின்றன. உனக்கு மாத்திரம் எவ்வாறு இந்த விபரீத புத்தி உண்டாகியது? இந்த உனது வார்த்தைகளைக் கட்டாயம் வாயுதேவனிடம் கூறுவேன்" என்று சொல்லிவிட்டு மேலே சென்ருர்.

மார்க்கத்தில் வாயு தேவனைக் கண்ட நாரதர், கூற லுற்ருர்! "வாயு தேவனே! நேற்று நான் இமவான் சென்றிருந்தேன். அங்கு ஒரு இலவ மரத்தைக் கண்டேன். மரங்களுள் பலமற்ற மரமாகிய அவ்விலவ மரம் நீண்டு உயர்ந்து கவிந்து மேருவின் சிகரம்போல் தோற்றம் அளித்தது. பல பிராணிகளுக்கு நிழலைக் கொடுத்து உபகாரம் செய்து வருகின்றது. என்னைப் போலவே எங்கும் ஸஞ்சரித்துவரும் நீ அம்மரத்தைக் காணவில்லையா! அல்லது உன் பலத்தை அதனிடம் காட்டவில்லையா? எனக்கு இவ்வாறு சந்தேகம் உண்டாயிற்று. உடனே அம்மரத்தையே இக்கேள்விகளைக் கேட்கலானேன். அம்மரம் தன்னை மிகுந்த பலவானுக எண்ணுகிறது. உன்னைப் பற்றிய ஆக்ஷேபத்திற்குரிய சில வார்த்தைகளை அது கூறிற்று. அவைகளை உன்னிடம் கூறுவது தகுதியல்ல. உலகில் எவ்வுயிர்களும் பிழைத்திருப்பதும் உன்னுலேயே. பலம் பொருந்தியவர்களுள் சிறந்தவன் நீயே என்பதை நான் நன்கறிவேன்" என்று கூறிவிட்டு விரைந்து சென்ருர்.

பிறகு நாரதரால் இவ்வாறு தூண்டப்பட்ட வாயுவும் ஹிமாசலத்தை அடைந்தது. அம்மரத்தையும் நேரில் கண்டது. "இலவ மரமே! உனது பலத்தை நான் நன்கறிவேன்.

நாரத பகவான் உன்னைச் சந்தித்தபோது நீ என்னைப் பற்றி இகழ்ந்தவற்றையும் நன்குணர்ந்தேன், நான் உன்னை அறியாமையில்லை. ஆதியில் படைப்புத் தொழிலில் ஈடுபட்ட பிரமன் தன் தொழிலைச் செய்து உன் நிழலில் இளைப்பாறினர். நீ அவருக்குச் செய்த உபகாரத்தை நினைத்தே உன்னை நான் அணுகவில்லை. அதனல் நீ என்னையும் விடப் பலம் பொருந்தியவனுக எண்ணலுற்ருய். எனது பலத்தை நாளைக் காலையில் காண்பிக்கின்றேன்" என்று கூறிற்று.

இலவ மரம் அலக்ஷ்ய புத்தியுடன் சிரித்துக்கொண்டே வாயுவைக் குறித்துக் கூறிற்று, "வாயுவே! உன்னை நானும் நன்கறிவேன். உனது பலம் என்னை என் செய்யக்கூடும். நீ மற்றவரைவிட பலவானுகயிருக்கலாம். உன்னிலும் பலமுடையவன் நானே. என் மதியின் பலத்தால் உன்னை வெல்லப்போவதை நீயே காணப்போகிருய். மதியின் பலம் விதியையும் வெல்ல வல்லதன்ருே!" என்று பகர்ந்தது. வாயுவும் மறுநாட் காலையை எதிர்பார்த்துக் கொண்டு சென்றது.

அன்று இரவு முழுவதும் தனக்கு மிக பலவானுன வாயுவினேடு விளைந்த துவேஷத்தை நினைத்து இலவு துயருற்றது. நாரதர் சொல்லியதே உண்மை. நான் மற்றை மரங்களிலும் பலம் குன்றியவன். வாயு, மிகுந்த பலம் வாய்ந்தவன். வீண் கவுரவத்தாலும் துரஹங்காரத்தாலும் ருஷியின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்காது நின்றேன். பலவானுடன் விரோதமும் நிகழ்ந்து விட்டது. ஆயினும் எனது புத்தி பலத்தால் வாயுவைத் தோற்கச் செய்வேன். புத்தியில் எனக்கு நிகரான மரம் வேறு ஒன்றுமில்லை எனத் தனக்குள் சொல்லிக்கொண்டே சிறிதுநேரம் சிந்தித்தது. பின்னர் நான் சிந்தித்துத் தெளிந்த இந்த உபாயத்தை இலையடர்ந்த மற்றை மரங்களும் கைக்கொள்ளத் துணிந்தால், ப்ரசண்ட மாருதமானுலும் அவைகளை என்ன செய்ய முடியும் என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டது.

இவ்வாறு சிந்தித்துத் தெளிந்த அவ்விலவ மரம் தானே தன் இலைகளை உதிர்த்தது. சிறு கிளைகளையும் முற்றிலும் முறித்தெறிந்தது. பூக்கொத்துகளும் காய்களும் சிறு கிளைகளும் மரத்தின் கீழே பாய் படுத்ததுபோல் பரம்பியிருந்தது. மரம், கிளைகள் முதலியன ஒன்றுமின்றி கம்பம் போல் நின்றது.

விடியற் காலம் நெருங்கவே முதல்நாள் கூறியபடி காற்று உக்ரமான வேகத்துடன் சமீபத்திலுள்ள மரங்கள்


பலவற்றையும் வீழ்த்திக் கொண்டு இலவ மரத்தை நெருங்கிற்று, கிளைகளெல்லாவற்றையும் இழந்து கம்பம்போல் நிற்கும் அம்மரத்தைக் கண்ணுற்றது. காற்று தணிந்த கோபத்தையுடையதாய்ச் சிரித்துக்கொண்டே, அம்மரத்தைக் குறித்துக் கூறிற்று.

“ஓ இலவ மரமே! இதுதான் உனது மதியின் ப்ரபாவமோ? என்னுடைய கோபம் உனக்கு என்ன தீங்கு செய்யுமோ. அதையே உன் மதியும் செய்ததே. நீயாகவே ஒரு இலையும்கிளையுமின்றி எல்லாவற்றையும் முறித்துக்கொண்டு நிற்கின்றாயே. வீணான உனது துரபிமானம் துராலோசனையைத் தூண்ட, முடிவில் என்னுடைய வீர்யத்திற்கு வசப்பட்டு விட்டாய். எனக்குப் பயந்து நான் செய்யும் கார்யத்தை நீயே செய்தனையன்றோ? இது உனது பலத்தின் கார்யமா? துரபிமானம் தன்னையே அழித்துவிடும். இதற்கு உதாரணம் நீயே” என்று சொல்லிவிட்டுச் சென்றது.

இலவ மரமும் அவ்வார்த்தைகளைக் கேட்டு நாம் புத்தி பலம் வாய்ந்தவன் என்று சொல்லிக்கொண்டே, மதிகெட்டவன் செய்யும் கார்யத்தைச் செய்துவிட்டோமே, நம்மை நாமே அழித்துக்கொண்டோமே. நாரதர் வார்த்தைகள் உண்மையல்லவா” என ப்ரலாபித்து, அநுதபித்தது.

இக்கதையினால் அறியக்கிடப்பது, பலத்தில் குறைந்த ஒருவன் பலம் வாய்ந்தவனோடு த்வேஷத்தைக் தேடிக் கொள்ளலாகாது. தன்னுடைய புத்தி பலத்தால் தப்புவதாகச் சிந்தித்தாலும் தனக்கு அழிவே நேரிடும். பிறகு அநுதாபம் அடையவும் நேரிடும் என்பதாம்.

---




**டாக்டர்:**-அப்போ நாளைக்கு பல்ரெடியாயிடும். வந்து கட்டிக்கொண்டு போயிடுங்கோ.

**வந்தவர்:**-ஓ! அதுக்கென்ன. ஒரு சிறிய சந்தேகம். எல்லாம் என் வாயிலிருந்து எடுத்தப் பல்தானே கட்டப்போறிங்கோ வேறு யாருடையதாவது......

**டாக்டர்:**:-?!.........

# அன்பு வெள்ளம்

**வை. மு. பத்மினி ஸ்ரீனிவாஸன்.**

[சென்ற இதழ் தொடர்ச்சி]

**புத்திசாலியான** உஷா தன்னைப் பேசவைக்கத் தான் இந்திரா ஏதோ செய்கிறாள் என்று உணர்ந்து, பேச வந்துவிட்டது போலவே சந்தோஷம் பொங்க, இந்திராவின் முகத்தையே என்ன பதில் சொல்கிறாள் என்று கூர்மையாகக் கவனித்துக்கொண்டே இருந்தாள். சேதுராமன் குழந்தையின் தாய்தந்தையரின் சம்மதம் கேட்டுத் தெரிவிப்பதாய்ச் சொல்லிவிட்டு இருவரும் குழந்தை உஷாவை அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார்கள்.

இந்திராவுக்கு வீட்டில் இருப்பே கொள்ளாது உஷாவின் வீட்டிற்கு ஓடினாள். ரேடியோ பேச்சையும் பாசுரங்களின் மகிமைகளையும் எடுத்துச்சொல்லி, நூதன சிகிச்சை முறையால் கட்டாயம் பலன் உண்டு என்பதையும் மனதில் பதியும்படி உஷாவின் தாயாரிடம் தெரிவித்தாள். “மாமி! உஷாவுக்கு பகவான் க்ருபையால் ஒரு ஆபத்தும் வராது என்று என் மனதில் ஏதோ ஒன்று சொல்லுகிறது!..... பிள்ளையாயிருந்தாலும் தேவலை. பெண் குழந்தை—இன்னும் இரண்டு வருஷமானால் கல்யாணம் செய்யவேணுமே. ஊமை என்றால் யார் மணப்பார்கள்? அவள் புத்திசாலித்தனதைப் பார்த்தால் என் மனது கரைகிறது. உயிருக்கு ஆபத்து இருக்கலாம் என்று டாக்டர் ஒரு பொடி வைப்பதால்தான் பயமாய் இருக்கிறது. மாமாவைக் கேட்டு யோசித்து வையுங்கள். உஷாவின் வாழ்க்கை பூஞ்சோலையாய் குலுங்க நான் என்ன வேண்டுமானாலும் செய்யத்தயாராயிருக்கிறேன். பணம் எவ்வளவு ஆனாலும் செலவு செய்யத் தயங்கவேமாட்டேன். உங்கள் சம்மதம்தான் தேவை” என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தாள்.

உஷாவின் தாயார் இந்திராவின் அபார ப்ரேமையைப் பார்த்து ப்ரமித்தாள். “என்ன அன்பு!....அவள் யாரோ, நாம் யாரோ....எதுக்கும் உதவாத ஊமையிடம் என்ன அன்பு, பாவம்!...” என்று தனக்குள்ளே நினைத்து வியந்தாள்! கணவரிடம் இது விஷயமாய் ஆலோசனை செய்தாள்.

இருவருமாய் யோசித்து, “ஊம்!...அது காலமும் ஊமையாகவேயிருந்து சிறுமைப்படுவதைவிட, ஒருவேளை பிழைத்து வாய்பெற்று எழுந்தால் எவ்வளவோ நன்மையாயிற்றே. அவர்கள் ஆசையைத்தான் பாழ்செய்வானேன்?....நமக்கு என்னவோ பணச் செலவு இல்லை. குழந்

தையே அவர்களுடையதாக இருக்கும்போது நமக்கென்ன கவலே? அவர்கள் தூய்மையான உள்ளத்திற்கு அவர்களுக்காகவாவது உயிர்ப்பிச்சை கொடுக்கமாட்டானு?........பகவான்பேரில் பாரத்தைப்போட்டு ஆப்ரேஷன் செய்துவிடச் சொல்லு. நான் கையொப்பம் போட்டுக் கொடுத்துவிடுகிறேன்....என்று பூரண சம்மதத்தைத் தெரிவித்தார் உஷாவின் தந்தை.

பெற்றவயிறு என்ன இருந்தாலும் கொஞ்சம்வேதனே செய்யத்தான் செய்தது! ஒருவேளே இறந்துவிட்டால் என்று நினைக்கும்போது குபீர் என்று வியர்த்தது. தன்னேச் சமாளித்துக்கொண்டு கையெழுத்துடன் தன் சம்மதத்தையும் இந்திராவிடம் சொல்லிக்கொடுத்தாள்.

இந்திராவின் சந்தோஷத்திற்கு எல்லேயே இல்லே. உஷா தன்னிடம் முத்துமுத்தாகப் பொறிஞ்சு கொட்டிப் பேசிவிட்டதாகவே மகிழ்ந்து, தன் கணவரிடம் செய்தியைச் சொல்லி ஆப்ரேஷனுக்கு டாக்டரிடம் ஏற்பாடு செய்ய வேண்டினுள்.

ஏற்கெனவே பக்தி ச்ரத்தையுடன் இருக்கும் இந்திரா, ரேடியோப் பேச்சுக்குப் பிறகு இன்னும் அதிகபக்தி செய்யத் தொடங்கினுள். உஷா வாய்பெற்று உயிருடன் எழுந்துவிட்டால் எத்தனேவித ப்ராத்தனேகளேச் செய்து கொள்ள முடியுமோ அத்தனேயும் செய்விப்பதாக வேண்டிக்கொண்டாள்.

ஆபரேஷன் நாளும் நெருங்கியது. உஷாவுக்குத் தூய்மையான வெள்ளேயுடையை அணிவித்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ருள். தாழம்பூ இதழைப்போன்ற அவள் வெள்ளேமேனிக்கு வெள்ளே ஆடை சாட்சாத்வாணியைப் போல் காட்சியை அளித்தது! குருகுருப்பான அவள் பார்வையும் சந்திரபிம்பம்போன்ற அவள் முகமும் பார்க்கப் பார்க்க இந்திராவுக்கு அன்பு மேலிட்டுப் பீறிட்டது! உஷாவைக் கட்டியணைத்து பல முத்தங்கள் கொடுத்தாள்.

இருப்பினும் மனதில், "பகவானே! என் கண்மணியை எனக்குத் திரும்பி வாயுடன் கொடுத்துவிடு, சோதனே செய்துவிடாதே!..." என்று எண்ணும்போது உலகமே சுற்றுவதுபோல் தோன்றியது. இவளுடைய அன்பைப் பார்த்து ப்ரமித்த, உஷாவின் தாய்தந்தையர், "கடவுளே! இந்திராவுக்காகவாவது உஷாவைக் காப்பாற்றிக்கொடு" என்று மனப்பூர்வமாய் வேண்டினுர்கள்.

உஷா குறித்த நேரத்தில் ஆபரேஷன் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்...வெளியில் சேது, இந்திரா,

உஷாவின் பெற்றோர்களும் குட்டியிட்ட பூனைபோல் அலைந்துகொண்டிருந்தார்கள். இந்திரா அந்த இரண்டு பாசுரங்களையும் சொல்லி, "அவர்களுக்கு எப்படித் தேன் மாரி பொழிந்து ஊனத்தைப் போக்கினையோ அதுபோல் என் கண்மணி மேலும் உன் க்ருபையான தேனைப் பொழிந்து என் வயிற்றில் பாலைவாரப்பா!" என்று பக வான் நாமத்தை உச்சரித்தவாறே உலாவிக்கொண்டிருந் தாள்.

என்னதான் தைரியமாய் இருந்தாலும் கூடவே, "ஐயோ! ஊரார் வீட்டுக் குழந்தைக்குத் துணிந்து இப்படிச் செய்கிறேனே! ஒன்றும் ஆபத்து இல்லாது இருக்கவேண் டுமே!!'...என்ற பயம் வேறு வாட்டியது.

ஒருவாறு ஆபரேஷன் முடிந்து உஷாவைக் குழந்தை கள் வார்டுக்குக் கொண்டுபோய் விட்டார்கள். நினைவு இழந்து மயக்கத்தில் கிடக்கும் உஷாவைப் பார்த்ததும் இந்திரா நடுங்கியேவிட்டாள். ஆஸ்பத்திரியே கண்ணால் பார்க்காதவர்கள் அந்தக் கூச்சலையும் நோயாளிகளின் கூக்குரலையும், படுக்கையின் பயங்கரத்தையும் பார்த்ததும் இன்னும் பயம் அதிகரித்தது. இவள் பயப்படுவதை அறிந்த டாக்டர், "அம்மா! இன்று பூராவும் நினைவு வராத படி மயக்க மருந்து கொடுத்திருக்கிறோம். அப்போதுதான் நரம்புகள் சரியான முறைக்கு வந்து வேலைசெய்யும். அநேகமாய் வெற்றி என்றே சொல்லலாம். இனி உயிருக் குப் பயம் இல்லை..." என்று சொன்னதைக் கேட்ட பிறகு தான் இந்திரா சுய உணர்வு பெற்றாள்.

மறுநாள் காலை சேதுராமன் காபி எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரியை அடைந்தான். உஷா எப்பொழுது உணர்வு பெற்று விழிப்பாள் என்ற ஏக்கத்தோடு இந்திரா படுக்கை அருகிலேயே உட்கார்ந்து குழந்தை முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தாள். அப்போதுதான் கொஞ் சம் உணர்வு பெற்று உஷா தன் கைகால்களை அசைத் தாள். இந்திரா அதைப் பார்த்ததுமே சந்தோஷம்பொங்க உஷா கண்ணை விழித்ததுமே "என்ன" என்று தன்னை அழைப்பாளோ வென்று ஆவலாய் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள். உஷா கொஞ்சம் கொஞ்ச மாய் நினைவுபெற்று மெள்ளக்கண்ணைத் திறந்தாள். வாயைக் கூட்டிக் குழைத்து சுற்றும் முற்றும் பார்த்து இந் திராவை இருகைகளாலும் அணைத்துக்கொள்ளும் பாவனை யில் "மாமீ!"....என்று அழைத்து ஆனந்தக் கண்ணீர் பெருகச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

ஊமை வாயை வேண்டாது எதைக் கேட்பாள்? இந்திராவின் செவிகளில், "மாமி!!"...என்ற உஷாவின் இனிய குரல்கேட்டதுதான் தாமதம்!...உணர்ச்சி மேலிட்டுப் பேச நா எழாது கண்ணில் நீர் தாரைதாரையாய்ப் பெருக, "கண்ணே என் வயிற்றில் பாலைவார்த்தாயா? ஏழுமலையானே! உன் க்ருபையே! கலிகால தெய்வம் தான்நீ! அப்பனே, என் கண்மணி உஷாவுக்கு தீர்க்கமான ஆயுளைக் கொடு!" என்று ஆனந்தம்பொங்கச் சொல்லியவாறு சேர்த்து அணைத்து பல முத்தங்களைத் தந்து தன் அன்பு மாரியைப் பொழிந்தாள்.

உஷா மெல்ல பேசத் தொடங்கி "மாமி! மாமா இல்லையா? எங்கே, கூப்பிடுங்கள்!" என்று மெல்லக்கேட்டாள். அதே சமயம் சேதுராமன் காபியுடன் ப்ரசன்னமானுன். இந்திரா சின்னஞ்சிறு குழந்தைபோல் ஓடிபோய்த் தன் கணவர் கையைக் குலுக்கி, "பகவான் நமக்கு ஜயத்தைக் கொடுத்துவிட்டார்! நம் கண்மணியைப் பாருங்கள். உங்களைத்தான் கூப்பிடுகிருள்...ஊரார் வீட்டுக் குழந்தையைத் துணிந்து ஆபத்தில் இறக்கிவிட்டேனே; தெய்வம் எனக்குத் துணைபுரிய வேண்டுமே; ஒருவேளை ஏதாவது விகாரமாய் நேர்ந்துவிட்டால் என்ன செய்வது?...என்று நினைக்கையில் என்னை அக்கினியில் போட்டுப் பொசுக்குவது போல் பயம் தூண்டியது. அதுமட்டும் ஜயம் கொடுத்தார் கடவுள்!" என்று ஆனந்தக் கூத்து ஆடினுள்.

இதற்குள் உஷாவின் தாய் தந்தையர் விஷயம் அறிந்து சந்தோஷம் பொங்க ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தார்கள். பெற்றேரைப் பார்த்த உஷாவின் முகம் சட்டென்று மாறியது.

தான் ஊமையாய் இருந்தபோது அலட்சியப்படுத்தியவர்கள் தான் பேச ஆரம்பித்ததும் எங்கு தன்னை அழைத்துப்போய் விடுவார்களோ என்று பயம் தலைதூக்கியது. இருப்பினும் தாய் என்ற பாசம் அவளை யறியாது தூண்டவே, "அம்மா" என்று அழைத்து இந்திராவின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

உஷாவின் தாய் உணர்ச்சி மிகுதியால் ஆனந்தம் பொங்க, "இந்திரா, உங்களிருவரின் முயற்சியாலும் அன்பினுலும்தான் உஷா இன்று உருப்படியானுள். அவள் பாக்கியசாலிதான். உஷாவைப் பெற்றெடுத்த தாயாயிருந்தாலும் அவள் விஷயத்தில் மிகவும் வஞ்சனையாகவே இருந்துவிட்டேன்....நான் அம்மாவே இல்லை. இந்திரா தான் உன் தாய். அவளை "அம்மா" என்று கூப்பிடு. நான்

உன் அம்மாவே இல்லை" என்று ஆவேசம் பொங்கச் சொல்லி, என்றும் இல்லாது உஷாவை அன்பாய்த் தொட்டு முத்தமிட்டாள். எல்லோர் உள்ளத்திலும் அவர் களை அறியாது ஒருவித குதூகலம் தாண்டவமாடியது.

ஒருவித குறையுமின்றி உஷாவுக்கு பூரண குணம் பெற்று வீட்டுக்கும் அழைத்து வந்தார்கள். உஷா தான் எல்லோரையும்போல் பேசுகிற சந்தோஷம் அவளுக்கு ஒருபுறம் இருந்தாலும் மறுபுறம் இவ்வளவு நாள் தன்னை அலட்சியப்படுத்திய தாய்தந்தையர்கள் அடிக்கடி தன்னை வந்து பார்த்துப் பேசிக்களிப்பதால் எங்கு தன்னை அவர்கள் வீட்டிற்கு அழைத்துப் போய்விடுவார்களோ என்ற கவலை பலமாய் பாதித்தது. இந்திராவை எப்படிப் பிரிவது என்று நினைக்கும்போதே உடல் சிலிர்த்து பயத்தால் வாடியது. "வா" என்று அழைத்தால் கட்டாயம் மறுத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தினால் மூளையே குழம்பித் தவித்தாள்.

உஷாவின் உள்ளம் ஒருவிதத் துடிப்புத் துடித்தால் இந்திராவின் மனம் அதற்குமேல் பன்மடங்காய் வேறு விதமாய்த் துடித்துக் கொண்டிருந்தது. உஷா கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் அழகு அவள் உள்ளத்தையே கவர்ந்தது. இவ்வளவு நாள் ஊமையாய் வாயடைந்திருந்த உஷாவை எல்லா வித கலைகளிலும் பயிற்சி அளித்து சகல கலாவல்லியாய்ச் செய்துவிட வேண்டும் என்ற ஆசை தூண்டி அவளுக்கு நன்றாய்க் குணமாகும் நாளையே எதிர் பார்த்திருந்தாள். இருப்பினும், கூடவே அவளை அறியாது ஒரு புதிய கலக்கம் உண்டாகி வேதனை செய்தது. ஒரு வேளை உஷாவின் தாயார் அவளை வீட்டுக்கு அனுப்பிவிடு என்றால் என்ன செய்வது? எப்படி உஷாவைப் பிரிந்து இருப்பது? உஷாவே ஒருவேளை இனி, தன் தாயாரிடம் போய்விடலாம் என்று எண்ணுவாளோ என்னவோ! அப்படி அவளே போகக் கிளம்பிவிட்டால் என்ன செய்வது என்ற வேதனையில் ஒருவேலையும் செய்யத் தோன்றாது உள்ளம் செல்லாய் அரித்துத் தின்றது.

அதே சமயம் உஷா ஓடிவந்து, "மாமி! உன்னை ஒன்று கேட்கிறேன். அதே யோசனையில் இரண்டு நாளாய் எனக்குச் சாப்பிடக்கூடப் பிடிக்கவில்லை, மாமீ! என்னை அம்மா வந்து அடிக்கடி பார்க்கிறாளே; அழைத்துக் கொண்டு போய்விடுவாளோ என்னமோ?...என்று பயமாய் இருக்கிறது. உன்னைவிட்டு என்னால் இனி, ஒரு நிமிஷம் கூட

இருக்க முடியாது, மாமி! என்னைக் கைவிட்டுவிடாதே" என்று கண்களில் கண்ணீர் முட்டக் கெஞ்சினாள்.

இந்திராவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. உலகத்தையே பரிசாகக் கொடுத்திருந்தால்கூட அவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டிருக்காது. உஷாவை அப்படியே வாரி எடுத்து அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக, "கண்ணா! நீ எங்கே அம்மாவிடம் போகவேணும் என்று சொல்லிவிடுவாயோ என்றுதான் வேதனைப்பட்டுச் சாகிறேன். இனி, உன்னை என் ஆயுள்வரை பிரியவே மாட்டேன்" என்று தேறுதல்சொல்லி ஆனந்தக் கூத்தாடினாள்.

இந்த விஷயம் பூராவும் அறிந்து சேதுராமனின் தாயார் நம் குழந்தைகளை விட்டு ஊரார் குழந்தை எதையோ வளர்க்கிறாள் பார்....என்ற கோபத்தினால் ப்ரமாதமாய் ஆத்திரம் கொண்டு கண்டித்து பாணங்களைப் போல் கடிதங்களைத் தொடுத்தாள் தன் மகன் மீது. இந்திராவின் மாமியாருக்குக் குழந்தை இல்லை என்ற குறை இருந்தாலும், சொத்து தன் இனத்தில் யாரையும் சேராது யாரோ முன்பின் தெரியாத அசலார் குழந்தைக்குச் சேர்ந்து போய்விடப்போகிறதே என்ற பொறாமை தீயைப் போல் கொளுத்தத் தலைப்பட்டது.

இதை அறிந்த இந்திரா அவர்களையும் சந்தோஷப் படுத்தத் தன் சின்ன நாத்தனார் பிள்ளை ரவிசந்தரனைத் தானே அழைத்து வைத்துக்கொண்டு அன்பாய் வளர்த்து படிப்புப் பூராவும் நன்றாய்ச் சொல்லிவைத்து ஸ்வீகாரம் செய்துகொண்டு அவனுக்கே உஷாவை கொடுத்து விவாகம் செய்துவிடுவதாய் நிச்சயித்து இருப்பதாய்க் கடிதம் எழுதி எல்லோரையும் வரவழைத்தாள்.

ரவிசந்திரனும் சந்தோஷமாய் மாமியிடம் இருக்க ஆசையுடன் வந்து சேர்ந்தான். உண்மையில் உஷாவின் எழிலைக் கண்டு இந்திராவின் மாமியார் பிரமித்தே போய் விட்டாள். தன் மகளின் அதிருஷ்டத்தை எண்ணிப் பூரித்து, இந்திராவின் தீர்மானத்தை மிகவும் சிலாகித்து மெச்சி உஷாவிடம் அதிக ப்ரியமாய் நடந்துகொண்டாள்.

இந்திராவின் மனதில் தனக்கு என்று ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்ற குறை அறவே இல்லாது பூரண த்ருப்தியடைந்தாள். இதன் பிறகே எல்லோர் மனமும் சாந்தி பெற்று நிம்மதி அடைந்தது.

சுபம்.

*

# திருப்பாவை மாலை

[திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க நூறுவது வெளியீடு-. 15-9-1957. 308 பக்கங்கள்-பதிப்பாசிரியரும் கிடைக்கு மிடமும்—பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திரு மலை அய்யங்கார்—ஆநந்த பிருந்தாவநம்—ஸ்ரீமௌந சுவாமிகள் மடத்துத் தெரு. அம்பத்தூர்.]

தானத்தில் சிறந்தது அன்னதானம். அதனினும் சீரிய பயன் பிணைப்பது ஞானதானம். 1937 முதல், இற்றை இருபதாண்டுகளாக, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி, ஸ்ரீ. ப. ரெ. திருமலை அய்யங்கார், கந் தங் கமழும் நூறு ஞானத்தமிழ் மாலைகள் புனைந்து, சுட ராழிபானடிக்கே சேர்த்து, அகிலத்தடியார்களுக்கு இல வசமாக வழங்கி வரும் திருப்பணி, தமிழ் ஆஸ்திகர்கள் நன் கறிந்ததுவே. நல்லறிவும், ஆஸ்திக ஞானமும், அவற்றி னைத் தேடியடையும் துறைகளும் மறக்கப்பட்டு, காணப் படாதிருக்கும் இக்காலத்தில், ஸ்ரீமான் கோட்டைச்சேரி, எஸ். ஸௌந்திர ராஜன் அவர்கள், சங்கத்தின் நூறுவது வெளியீட்டுப் பெரும் பொறுப்பை ஏற்று நூற்றுக்கணக்கான ரூபாய் கள் வழங்கி, கைம்மாறு கவாமல் கற்றறிந்தோர் வலுவில் வருந்தி வந்து உதவுவார் என்ற நமது தனிப் பண்பிற் கேற்ப, உலகோருக்கு இலவசத்தில் இம்மாலையை வழங்கிட முன் வந்த அன்னருக்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டவரே யாவோம்.

பாதகங்கள் தீர்த்து, பரமனடி காட்டி, வேதமனைத்துக் கும் வித்தாயுள்ள 'கோதை தமிழ்' என்ற நூலுள், மூழ்கி மூழ்கி, ஆழ்ந்து ஆழ்ந்து, தேடத்தேடப் புதுப்புது மதிப் பிலா மதி துலக்கும் மாணிக்கங்கள் உழைப்போருக்குக் கிடைத்தே வருகிறது. அத்துறையில் உழைக்கும் இப்பதிப் பாசிரியர், நோக்கு, 'ஆராய்ச்சிக் கட்டுரை'யாக அவர் வெளியிட்டுள்ள இத் திருப்பாவை மாலை, 'தமிழ் இலக்கியங் களிலிருந்து சொல் அடுக்குகளும், அதன் பழக்க வழக்கங் களும் அடங்கி,' 'ஓதியோதியுணருந்தோறும் உணர்ச்சி யுத வும் உபநிடதமாகலின் அதனை ஆராய்ந்து இன்புற முயல் வதற்கு ஏற்றதே என்பதாகும். (தோற்றுவாய். 3) 'மார்கழி நோன்பு' விஷயமாக எழுதப்பட்ட ஆராய்ச்சி பாகத்தில், நம் நாட்டில் பூர்வீகமாயிருந்து, இன்றும் பல நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படும் பல சீரிய விரதங்களின் சின்னங்கள், நன்கு அறிவுக்கும் வகையில் தொகுக்கப்பட்டுள் (பக்கம் 12—27).

'பண்டைச் சங்க இலக்கியங்களில் நன்கு பயின்ற ஆண்டாள் மிகவும் செவ்விதாய் அமைத்துக் கொண்ட திருப்பாவை முற்றும் "சங்கத் தமிழ்மாலையே" என்பது தேற்றமென, முதல் 186 பக்கம்வரை, சங்கநூல்களினின் றும், இதர பண்டைத் தமிழ் நூல்களினின்றும், கோதை தமிழில் தோற்றும் பிரயோகங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டுள்ளது. பின்னர், 242 பக்கம் முடிய, 'கோதையின் கவியமுதம்' நன்கு கடைந்தெடுத்து உருசி யும் உணர்வும் ஊட்டுவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள் ளது. 'கவிக்குரிய எல்லா அமைப்புக்களும் பூர்ணமாகப் பெற்று விளங்கும் விழுமிய நூலே சங்கத்தமிழ்மாலை' என் பதுதான் இவ்வாரய்ச்சி விளக்கும். மற்றும், தி. த—. சங்க வெளியீடுகளின் பெயர் தொகுதியும், பாவை நூல்பற்றிய பல்வகை ஆராய்ச்சிகளும், திருப்பாவை வரலாறும், அத் தொடரின் இலக்கணமும், திருவெம்பாவையுடன் ஒப்பிட்ட ஆராய்ச்சியும், அரும்பத விளக்கத்துடன், கூடிய திருப் பாவை பாசுரங்களும், இதர பல அரிய ஆராய்ச்சி நுட்பங் களும் இந்நூல்கள் மிளிர்கின்றன: 'பண்டை நூல்களில் பூரண பயிற்சியுற்றே இப்பாவை, ஆண்டாளால் பாடப் பெற்றுள்ளது' என்பதே இவ் ஆராய்ச்சியின் முடிவு. இம் முடிவும் நமது ஸத்சம்பிரதாயத்திற்கு எவ்விதத்திலும் விரோதமின்றிக்கே, ஆழ்வார் ஆசாரியர்களது வழி நின்றே நம்மை அழைத்துச் செல்வதாயுளதால், ஸ்ரீ வைஷ் ணவ சம்பிரதாயஸ்தர்களோ, பிரவசன பண்டிதர்களோ, காலக்ஷேப வித்வான்களோ இவ்வாராய்ச்சிக் கட்டுரை யைக் கண்டு அச்சமோ, அசூயையோ கொள்ளுவதற்கு அவசியமேயில்லை. சங்கக் கூட்டங்களாகப் பல்லோர் கூடி யோதும் சங்கத் தமிழாயினும் சரி, ஆதிகாலத் தமிழ்ச்சங்க நூல்களை யொட்டிய சங்கத் தமிழாயினும், சரி, "கோதை தமிழ் ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை, வையும் சுமப்பதுவும் வம்பே'—. அறிவும், ஆராய்ச்சியும், ஆஸ்திக்ய நோக்குடன் கைகோர்த்துஉழைக்க வேண்டியதேஉண்மை ஞானம் மிகுத்தும் நேர் நெறியென்ற நோக்கில், இம்மாதிரி வெளியீடுகள் மென்மேலும் வெளிவர, பலபல வள்ளலார் போட்டியிட்டு முந்தவேண்டும்—. தெளிவும், மகிழ்வும், மண மும், மாண்பும் மிகுதியில் தந்திடும் இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் இனி அதிகம் வெளிவர வேண்டுமென்ற பிரார்த் தனையுடன் இத் திருப்பாவை மாலையை வரவேற்கிறோம்.

வி. கே. பா.

❁




முரளி வந்த காரணத்தை அறிந்ததும் அவன் சகாக்கள் அனைவரும் கைக்கொட்டி கொக்கரித்தனர். "டேய்! முரளி எப்போது இந்த ஊருக்கு வந்தாலும், வேலை வேலை என்று ஓடிவிடுவான். ஆனால் இந்த தடவை நாம் அவனோடு ஜாலியாகக் கழிக்கலாம்'' என்றான் ஒருவன்.

"முரளி இங்கு வருவதற்குக் காரணமாய் இருந்தவர்கள் நீடூழி வாழவேண்டும்'' என்று ஒருவன் ஆசி கொடுத்தான்.

"ஏண்டாப்பா முரளி! தாத்தாவெல்லாம் சௌக்கியமா? இந்த தடவை உங்கள் தோட்டமும், உங்கள் நிலமும் தான் பச்சென்று நன்றாகச் செழித்து வளர்ந்திருக்கிறது. எங்களுக்காக சுயமாய் புதுப்புது யோசனைகள் தோன்றாவிட்டாலும் உன் தாத்தாவிடமிருந்து கற்று அதன்படி செய்தாலும் எங்களுக்குப் பலன் கிடைக்கவில்லையே'' என்று தங்களுக்கு பலன் கிடைக்காததின் வருத்தத்தையும், சதாசிவத்தின் அறிவையும் அவர் வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்தினர். முரளிக்கு நடத்திய வரவேற்பை இளைஞர்களோடு நிறுத்த மனமில்லாது இக்கிழவரும் தலை நீட்டினர் போலும்.

தங்கள் பயிர் நன்றாக வளர்ந்திருக்கிறது என்பதைக் கேட்க முரளிக்கு சந்தோஷம் பொங்கி அதைப்போய் முதலில் காண உள்ளம் துடித்தது. ஆனால் மறுபுறம் 'பாவம்! இவர்களுக்கு அதிர்ஷ்டம் நன்றாயில்லையே' என்ற வருத்தமும் பாதித்தது.

ஒவ்வொருவரிடமும், பேசிப்பேசி மீண்டு, செல்வதற்குள் கும்மிருட்டு சூழ ஆரம்பித்து விட்டது. இந்நேரத்தில் நிலங்கள் பக்கம் புழுப்பூச்சிகள் நடமாடும் என்பதால் அங்கு போகாது திரும்ப வேண்டியதாயிற்று. பார்க்காது



183214

திரும்பவும் மனமில்லாது அரை மனதுடன் திரும்பிய முரளியை மரங்கள், செடிகள் இவைகளின் மூலம் புகுந்து வெளிப்பட்டக் குளிர்ந்தக் காற்று சற்று சாந்திபடுத்தியது.

நேரம் போவது தெரியாமல் முரளி தன் பாட்டனுருடன் பேசிப்பேசி மகிழ்ந்தான். வீட்டு விஷயம், ஊர் விஷயம், உலக விஷயம் என்று படிப்படியாக அளவளாவினுன். நடுவே ஷண்முகம் குடும்பத்தாரைப் பற்றியும் அதில் வார்த்தைகள் உலாவின.

'அவுட் ஹௌஸை'ப் பழுது பார்த்திருந்தாலும் முரளி காலே எழுந்தவுடன் தன் திருப்திக்காக பக்கத்திலிருந்து சுத்தம் செய்தான். சரியான நேரத்திற்கு சதாசிவத்தின் உத்திரவுப்படி ஸ்டேஷனுக்குச் சென்ருன் விருந்தாளிகளே எதிர்கொண்டழைக்க.

ரேவதிக்கு தனியாக எங்கும் சென்று வழக்கமில்லாததால், தான் இறங்கவேண்டிய கருப்பஞ்சேரி இதுதான் என்று நிலேயத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் பலகை அறிவித்தும்கூட இறங்கத் தைரியமில்லே. வெளியே முரளி வந்திருக்கிருனு என்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தவாறு இருந்தாள். அவளுக்கு எப்போதும் ஒரு பயம்—நாம் ரயிலே விட்டு இறங்கி சாமான்களே இறக்குவதற்குள் நம் சாமானே எடுத்துக்கொண்டு ரயில் ஓடிவிடுமோ என்ற பயம்தான். பெரிய துணேயோடும், குடும்பசகிதமாக தந்தை, சித்தி முதலியவரோடும் வந்தாலே இந்த பயம் உள்ளவளுக்கு, தனியாக அதுவும் இந்த நிலேயில் ரகுவையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கும்போது எப்படியிருக்கும்?

இறங்கவும் இறங்காது, ரயிலும் ஓடிவிடப்போகிறதே என்ற சங்கடத்தில் தவித்துக்கொண்டிருந்த அவளே ரகுவே, "என்ன ரேவதி! இப்படி நிற்கிருய்?" என்று வினவினுன். பதில் கூற இயலாத அவள் பெட்டியை மட்டும் கையில் தூக்கினுள். ரகுவும் ஒரு சாமானே எடுத்தவாறு முதலில் இறங்கினுன். ஒவ்வொரு பெட்டியாக புகுந்து மீண்டு கொண்டிருந்த முரளி, ரகுவைக் கண்டதும் ஓடோடி வந்தான். அவர்கள் பெட்டியில் ஏறினுன். ரேவதி ஒன்றும் பேசாது தங்கள் சாமான்களே மட்டும் ஒவ்வொன்ருக எடுத்து வைத்தாள். முரளி அவைகளே வெளியே கொணர்ந்து வைத்தபிறகே "உம்...ரகு எல்லாம் வந்து விட்டதா? கிளம்பலாமா?" என்ருன். ரகு, ரேவதி முகத்தை உற்று நோக்க, அவள் தலேயசைப்பின் மூலம் காரியங்கள் மௌனமாகவே நிறைவேறின.

சுற்றுப்புற இயற்கைக் காட்சிகளை சுவைத்தவண்ணம் வண்டியில் வந்து சேர்ந்தனர். முன் ஏற்பாட்டின்படி எல்லாம் நடந்தேறின. முரளியின் தாத்தா வீட்டிலேயே சற்றுநேரம் தங்குவதற்குள் ரேவதிக்கு இருப்பே கொள்ள வில்லை. ரகு ஏதாவது உளறி வைக்கப் போகிருனே என்று உள்ளூர உதைப்பு: தங்கள் விடுதிக்கு சென்ற மர்ந்த பிறகுதான் நிம்மதி பிறந்தது.

சதாசிவத்தின் உறவினரோடு, அந்த வீட்டிலேயே இருக்க வேண்டுமோ? என முதலில் எண்ணினுள். தனி விடுதியைக் கண்டதும் சந்தோஷம் புரண்டது.

ரகுவை அழைத்துக்கொண்டு வீட்டைச் சுற்ற புறப் பட்டாள். வாயிலில் வராண்டாவில் மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. உள்ளே ஒரு பெரிய அகலமான கூடம் போலிருந்தது. அதில் மேஜை நாற்காலியும் சாய்வு நாற்காலியும் இருந்தன. எதிர்எதிராக இரண்டு அறைகள். உள்புறம் சாப்பாட்டு அறைகள் இரண்டும், குளியலறை முறையே வழக்கப்படி இருந்தன.

மேலே சென்றவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "ரகு! இதோ பார்...என்ன இது?" என்று ஒன்றைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள். ரகுவும் பதில் கூறுது சிரித்தான். அவர்கள் சிரிப்புக்குக் காரணமாய் இருந்தவை? முன் காலத்தில் அரண்மனைகளிலெல்லாம் திண்டுகளாகலேயே நாற்காலி போலும், தனித்தனியாக திண்டுகளும் இருக்கு மல்லவா? அதேபோல் நடுவில் திண்டாலான நாற்காலி காணப்பட்டது. அதுவே சிரிப்பிற்குக் காரணம். மரி யாதைப்பட்டவர்களை அது போன்ற ஆசனங்களில் அமர வைப்பது சதாசிவத்தின் குடும்பத்தார் வழக்கம் என்பது பிறகு அவளுக்குத் தெரிந்தது.

மொத்தத்தில் வீடு நன்ருக காற்ரேட்டமும் வெளிச்ச மும் கொண்டு அழகியதாகக் காட்சியளித்தது. கீழே வந்த ரகு பேசாமல் சென்றமர்ந்தான். ரேவதி தங்கள் சாமான் களை ஒழுங்குபடுத்திவிட்டு ரகுவிடம் வந்தாள்.

"ரகு! வீடு நன்ருக இருக்கிறதா?" என்ருள் ரேவதி.

"நன்ருக இருக்கிறது............அம்மா எப்பொழுது வருவாள்?"

"வந்த அன்றே குழந்தைக்கு அம்மா ஞாபகமா? வரு வாள் சீக்கிரம். இந்த கிராமம் அழகாக இருக்கும்போலி ருக்கிறது. நாம் சுற்றிப் பார்க்கவேண்டாமா? முரளியிடம் அங்கெல்லாம் அழைத்துப் போகும்படி கேள்."

"கேட்கிறேன்.......ரஞ்சன்......ரஞ்........எப்பொழுது வருவான்?"

"அவனைப்பற்றி யென்ன? படித்துவிட்டு வருவான். ரகு, உனக்குக் களைப்பாய் இருக்கிறது. நீ சற்று படுத்து உறங்கு. இன்று எங்கும் சுற்ற வேண்டாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம். நான் சித்திக்கு நாம் சுகமாய் வந்து சேர்ந்தது பற்றி கடிதம் எழுதுகிறேன்" என்று கார்டையும் பேனாவையும் எடுத்துக்கொண்டு அமர்ந்தாள்.

ரேவதிக்கு அவ்வூர் மிகவும் பழகிவிட்டது. அவர்கள் வந்து மூன்று மாதங்கள் பறந்தோடிவிட்டன. அவளுக்கு அதற்குள்தான் எத்தனை சிநேகிதிகள்? நடந்த நிகழ்ச்சிதான் எத்தனை! முரளியிருந்த ஒரு வாரத்தில் ஓய்வில்லாமல் சுற்றினர். அவர்கள் சுற்றியதின் மூலம் சதாசிவத்தின் ஸ்திதி வெளியாயிற்று. ஏளனமாக நினைத்து வெறுத்த தன் குணத்தைத் தானே முற்றிலும் வெறுத்தாள். 'அடேயப்பா! நம் ஊரில் கோட்டைபோல வீடு என்றால், இங்கு ஊர் போல சொத்து' என்று அதிசயித்தாள்.

அவ்வூரில் கரும்புத் தோட்டங்கள் ஏராளம். சர்க்கரை செய்யும் ஆலையும் அமைந்துள்ளது. கரும்புக்கு பெயர் போன ஊராதலாலே 'கருப்பஞ்சேரி' என்று வழங்குகிறார்கள். சதாசிவத்திற்கு அவ்வூரிலுள்ள தோட்டங்களில் முக்கால்பாகம் சொந்தமானது. மேலும் அவர் அவ்வாலையிலும் பங்கு போட்டிருக்கிறார். தன் அண்ணன் இருக்கும் அவுட் ஹௌஸோடு கூடிய வீடு தவிர, கோடை காலத்தில் தங்க தோட்டத்தின் நடுவே ஒரு அழகிய பங்களாவும் அவருக்கு உண்டு. எத்தனை பணமிருந்தாலும் பலருக்கு தாராளம் கிடையாது. தாங்களும் அனுபவிக்காது, பிறருக்கும் உதவி புரியாது பதுக்கி வைத்துக் கடைசியில் முன் பின் தெரியாத நபருக்கு தத்தம் செய்யும் மனிதர்களும் உண்டு. சதாசிவமோ தம் குடும்பத்தாருக்கும் அளவுமீறி கொடுத்து, ஏழைகளுக்கு—அதாவது அவரிடம் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு, சிறிய கூரை வீடும் வரிசையாக தோட்டத்திற்கு அருகிலேயே அமைத்துத் தந்திருக்கிறார். அதுவே ஒரு சிறிய 'காலனி' போல் இருக்கும். 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்பதுபோல் சிறிய வீடுகளில் பெரிய குடும்பங்கள்கூட கஷ்டமின்றி இன்பமாக குளுகுளு என்று வாழ்ந்து வருவதைப் பார்க்க மகிழ்ச்சிப் பொங்கும்.

கிராமமானாலும் அவ்வூரில் கல்வி பெருகியிருந்தது. அவ்வூரின் அழகை ஏரி மேலும் எடுத்துக் காட்டியது. ரேவதி தன் மனதில் நினைத்தபடியே நிலாச்சாப்பாடு ஏற்

பாடு செய்தாள். முக்யமான தோழியாய் அவளுக்கு அமைந்தவள் உமாதான். அந்த உமாவிற்குத் தோழிகள் ஏராளம். ஒவ்வொருவரையும் ஒருவர்மூலம் ஒருவர் சங்கிலி போல் அழைத்துக் கொண்டனர். சிறியவர்களோடு பெரியவரும் சேர்ந்து அந்த உல்லாச விருந்தை விமரிசையாக நடத்தி முடித்தனர். அன்று ரேவதி ஆனந்தத்தில் மூழ்கி இருந்தாள்.

சிறிய அலைகளாக எழும்பி தணியும் நீரை உடைய ஏரியில் செல்வதற்கு ஓடங்களும் பொருத்தப்பட்டிருக்கும். நிலாச்சாப்பாடு முடிந்ததும் பல பிரிவுகளாகப் பிரிந்து அந்த நிர்மலமான நீரோடையில் சென்று சென்று கரை சேர்ந்தனர். ரகுவும் அக்கேளிக்கைகளில் கலந்து களிப்பெய்தினுன். இம்மாதிரி இன்னும் அவ்வூரில் சென்ற முக்யமான இடங்கள் பலப்பல.

அவ்வூரின் எல்லையை ஒருவாறு புரிந்துகொண்ட ரேவதி, முரளி ஊர் சென்ற பிறகும் ரகுவை அழைத்துக் கொண்டு தினந்தோறும் மாலையில் பல இடத்திற்கு நடந்து சென்று காற்று வாங்கினர். சில நாள் சிநேகிதிகளும் வருவர்.

ரேவதியின் உயிர்த்தோழி உமாவைப் பற்றி சிறிது கூறவேண்டாமா? அவள் கண்ணியமான குடும்பத்தில் உதித்தவள். கல்லூரிப் படிப்பை அவள் பெற்ருேர் விரும்பாததால் பள்ளிப் படிப்பே அவளுக்கு முற்றுப்புள்ளியாகி விட்டது. ஆனுல்தன் அறிவிற்கு வேலைகொடுக்காமல் துருப் பிடிக்க வைக்க அவள் விரும்பவில்லை. நூல் நிலையத்தின் மூலம் எல்லாக் கதைகளையும், காவியங்களையும், கட்டுரைகளையும் கணக்கில்லாமல் படித்து உலக விஷயங்களை அளவுக்கு மீறி அறிந்து கொள்கிருள். அவளுக்கு சித்திரம் எழுதுவது என்ருல் அளவு கடந்த ப்ரியம். ஊண் உறக்கமில்லாதுகூட இருப்பாள். ஒரு கோடாவது போடாது அவளால் ஒரு நாள்கூட இருக்க முடியாது. ரேவதிக்கு சித்திரம் எழுத வராதே தவிர, அதைப் போடுபவர்களை உற்சாகப்படுத்துவாள். ரேவதியின் தூண்டுதலினுல் உமா முன்னைவிட அநேகப் படங்கள் எழுதிக் குவிக்கத் தொடங்கினுள்.

முதலிலெல்லாம் உமா யார் என்பது ரேவதிக்குத் தெரியாமலேயே பழகி வந்தாள். ஒரு நாள் உமா வீட்டிற்கு ரேவதி சென்றிருந்தபோது அவள் ஒரு கடிதத்தை மிக உற்சாகத்துடன் படித்துக் கொண்டிருந்தாள். அக் கடிதத்தின் மேல் வெளிநாட்டு முத்திரை இருப்பதைக் கண்ணுற்ற ரேவதி ''உமா! யார் கடிதம் எழுதியிருக்கிருர்

கள். வெளிநாட்டிலிருந்து வந்தது போல் தோன்று கிறதே?" என்று பேச்சைத் துவக்கினுள்.

"ஆமாம் ரேவதி! என் அண்ணனிடமிருந்து வந்திருக் கிறது. அவன் அமெரிக்கா சென்றிருக்கிருனே"

"ஓ! அப்படியா! நீ ஏன் சொல்லவேயில்லே. இந்த விஷ யத்தைச் சொல்லியிருந்தால் நான் ரஞ்சனுக்கு உன் அண்ணன் பெயரையும் விலாசத்தையும் எழுதியிருப்பேன். ஒருவருக்கொருவர் சிநேகம் செய்து கொண்டால் உதவியா யிருக்கும். வெளிநாடுகளில் நம் நாட்டு நண்பர்கள் அதிகம் இருப்பது நல்லதுதானே?" என்று அவள்மீது குற்றம் சாட்டிப் பேசினுன்.

"என்ன ரஞ்சனு? அதுதான் உன் அண்ணனு? அப் படிச் சொல்லு?" என்று குதித்தாள் உமா.


"உமா! ரஞ்சனே உனக்கு எப்படித் தெரியும். சரி உன் அண்ணன் பெயர்.......?"

"உன் அண்ணனேப்பற்றி நீ கூறுவிடிலும் என் அண் ணன் நிரம்ப எழுதியிருக்கிருன். சுதர்ஸன் என்பதுதான் என் அண்ணன்."

"ஓ! சுதர்ஸன் தங்கையா நீ? ரஞ்சன் கூட ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுகிருன். உமா நாம் இருவரும் இச்சிறிய ஊரில் இருந்து கொண்டே ஒரு விஷயத்தையும் கூருது போனுலும் நம் அண்ணன்கள் நமக்குமுன்பே நண்பராகி விட்டார்கள்." என்று ஆனந்த மிகுதியில் உரக்கவே கூறி சிரித்தாள் ரேவதி. உடனே ஒரு உத்தரவும் போட்டாள் உமாவிற்கு. "உமா! நீ எனக்கு ஒரு வாக்குக் கொடுக்க வேண்டும். நானும் ரகுவும் இவ்வூரிற்கு வந்திருக்கிறேம் என்ற விஷயம் ரஞ்சனுக்குத் தெரியவே கூடாது. ரகுவின் உடல் நலத்திற்காக என்ற காரணமும் தெரிந்துவிட்டால் ரஞ்சனுக்கு எங்கள் மீது இருக்கும் அன்பால், படிப்பை பாதியில் உதறிவிட்டு வந்துவிடுவான். இந்த உதவி கட்டா யம் செய்யவேண்டும்".

இந்த சம்பவம் நடந்தது முதலே ரேவதிக்கும் உமா விற்கும் ஏற்கனவே யிருந்த ப்ரேமை பன்மடங்காகப் பெரு கத் தொடங்கியது. உமாவின் உதவி மூலம் ரகுவின் நினேவை பல விதங்களில் திருப்பத் தொடங்கினுள் ரேவதி.

ரகு வந்த புதிதில் கலங்கியே காணப்பட்டான். புதிய இடம், புது மனிதர்கள்தான் அதற்குக் காரணம். நாள் சென்றல் பழகிவிடும் என எண்ணினுள் ரேவதி. மாதங்கள் உருண்டு கொண்டே வந்தபோது அவள் எண்ணம் ஏறக் குறைய சரி யென்றே நினைக்க முடிந்தது. சதாசிவத்தின்



அண்ணன், அண்ணியின் அரவணைப்பாலும், ரேவதியின், அன்பு சாமர்த்தியம் முதலியவற்றாலும் ரகு மிகவும் முன்னேறத் தொடங்கினான்.

முன்பெல்லாம் கிலியின் வலிமையால் பதறினானே தவிர இறந்த காலத்தைப்பற்றிய நினைவு அறவே ஒழிந்து, அதாவது தனக்கு ஏற்பட்டிருக்கும் நிலை, குடும்பத்தின் நிலை—ஒன்றும் புரியாத குழப்பமான ஸ்திதியில் இருந்தான். நாள் செல்லச் செல்ல பேசுவது நின்று எப்போதும் ப்ரமை பிடித்தமாதிரி உட்கார்ந்தே இருந்தான். இப்போது ஒவ்வொன்றாகப் புரியத் தொடங்கி "ரேவதி! முத்து இப்போது எங்கிருக்கிறான்" என்றும். "ரஞ்சன் அமெரிக்காவிலிருந்து வரவில்லையே அங்கேயேதான் இருக்கிறானா" என்றும். "ரேவதி! அம்மா மட்டும் ஏன் அங்கு இருக்க வேண்டும். வாஸு, சரோ இருவருடனும் இங்கு வரச் சொல்லி எழுதிவிடலாம். சில நாட்கள் சென்றதும் நாமும் அங்கு போய்விடலாம்", என்றும் கேள்விகள் போடுவான். "என் படிப்பு நடுவில் நின்று விட்டதே. ரேவதி! நான் எப்படி அதைத் தொடருவது. அவ்வூரில் என்னைப்பார்த்து எல்லோரும் ஏளனம் செய்வார்களா" என்று கேட்கும் போது ரகுவின் குரலில் வருத்தமும், மானமும் குழைந்து தென்படும்.


ரேவதி புத்தகங்களைப் படிப்பதில் ரகுவைத் திணிப்ப தோடு, ரகு இம்மாதிரியான கேள்விகளைக் கேட்கத்

தொடங்கியதும், அவன் அறிவிற்கு எட்டும் வகையில் அவன் செய்த தவறுகளையும், அவனுக்கு உயிரைக் கொடுத்து அவனுக்காக முத்து ஏற்றுக் கொண்டிருக்கும் அவமானத்தையும், லக்ஷ்மியின் தவிப்பையும். தங்கள் கதியையும், நடுவில் சமயத்திற்குத் தெரிந்தாற்போல் உறைத்தாள். ரகு தன் தவறுகளையும், தன்னால் தன் குடும்பம் சீரழிந்து போவதையும் எண்ணி மறுகினான். என்ன வழி செய்து எல்லாவற்றையும் சரியானபடி செய்வது என்று சிந்தித்துக் குழம்பினான்.

வெளியிலும் கூறமுடியாது உள்ளுக்குள்ளேயே புழுங்குவதால் உடல் இளைத்து, நெற்றிகளில் சுருக்கம் விழுந்து எலும்புக்கூடாகக் காணப்பட்டான். இந்நிலையிலேயே வைத்துவிட்டாலும், கவலையாலேயே, வேறு ஏதாவது வியாதி கைப்பற்றலாம் என்று ரேவதி "ரகு! சதாசிவம் தாத்தாவிற்குத் தெரிந்தவர்கள் போலீஸில் அநேகம் பேர்கள் இருப்பதால் முத்துவிற்கு சீக்கிரம் விடுதலை கிடைத்து விடுமாம். சித்தி எழுதியிருக்கிறாள்" என்றும். "சித்தியை



வரச் சொல் என்று மட்டும் கூறுகிறாயே. நீ இப்படி மௌன விரதம் எடுத்துக் கொண்டதுபோல் இருந்தால் சித்திக்கும் மன நிம்மதி ஏற்படாது. சித்திக்கு நான்



எழுதிய கடிதத்திற்கு பதிலில் ரகுவிற்கு பிடித்தமானவை களைக் கேட்டு அதன்படி செய். நான் கூடிய சீக்கிரம் வரு கிறேன் என்று எழுதியிருக்கிறாள். ஏன் ரகு! இந்த ஊரில் உனக்கு எங்குபோக, என்ன விளையாட்டு விளையாட அதிக ஆசை" என்று கேட்பாள்.

"எனக்கு படகில் செல்வதுதான் கொஞ்சம் பிடிக்கும்."

"அப்படியா! எனக்கும் அதில்தான் ஆசை. இனி நாம் ஊர் திரும்பும் வரை தினமும் என் சிநேகிதிகளும், உனக்கு ஜோடியாக நீ அழைத்துக் கொள்ளும் நண்பர்களும் படகில் செல்லலாம்."

அன்றிலிருந்து படகில் செல்வது அவர்களுக்கு ஒரு உல்லாச விளையாட்டாக அமைந்தது.

ரேவதியோடு மாலையில் உலாவச் சென்று கொண்டிருந்த ரகு தனியேயும் சென்று வரலானான். ரகுவிற்காவது, ரேவதிக்காவது ரஞ்சன் எழுதும் கடிதங்களை லக்ஷ்மி அங்கிருந்து ஆள் மூலமோ, தபால் மூலமோ இங்கு அனுப்புவாள். அவைகளில் ரஞ்சன் தன் அனுபவங்களையும், அமெரிக்க நிகழ்ச்சிகளையும் வர்ணித்திருப்பான். ரகு சோக நிலையில் இருக்கும்போது அக்கடிதத்தைப் படிக்கச் சொல்லி, தானும் பின்னின்று படித்து அனுபவிப்பாள். பாவம்! ரேவதி ஒன்றும் பழக்கமில்லாதிருந்தும், தன்னுலியன்ற வரை ரகுவை புது மனிதனுக்கிக் கொண்டிருந்தாள்.

கருப்பஞ்சேரியில் நடந்த விஷயங்களே இவ்வளவு இருக்கையில் 'ஆனந்த பவனத்தில்' நடந்த சம்பவங்கள் எத்தனையோ?

* * *

மனிதனுக்கு ஏற்படும் சங்கடங்களையும், அவன் வாழ்க்கையில் குறிக்கிடும் சம்பவங்களையும்பற்றி காலத்துக்கு என்ன கவலை? தன் வேலையை ஆண்டவன் கட்டளைப்படி கடத்திக் கொண்டிருந்தது. பூ, காய், பழம் என்று பலவாறு மாறி கடைசியில் ஒரு உருபெருவது போல், நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்று பலவாறு மாறி வருடமாக உருவெடுக்கத் தொடங்கியது.

"ஹூம்...பாவம் முத்து சிறைக்குச் சென்று இத்தனை மாதங்களா ஓடி விட்டது? நமக்கு ஒரு நிமிடம் போல் தோன்றுகிறது. அவன் மனைவிக்கும் அவனுக்கும் இது ஒரு யுகமாக வல்லவா தோன்றும்" என்று ஊரார் பேசினர்.

'ஆம். முத்து சென்று நாட்கள் எத்தனை ஓடிவிட்டன?' என்று ஒரு கேள்வி லக்ஷ்மியின் மனதிலும் எழத்தான் செய்தன. அவள் ஒரு பட்டமரம் என்று அவள் மனதில் ஒரு எண்ணம். உணர்ச்சியற்ற ஜடம் போல் தன் வேலை

களைச் செயலாக்கிக் கொண்டிருந்தாள். அவள் உள்ளம் கடந்துபோன விஷயங்களில் தாவி ஒட்டிக்கொண்டது.

'ரகுவும், ரேவதியும் கருப்பஞ்சேரி சென்ற பிறகு சில நாட்களில் அந்த போலிஸார் எப்படி துளைத்து விட்டனர். நான் என் மனதை அடக்கிக் கொண்டு சதாசிவம் கூறியதுபோல் 'முத்து ஒரு அயோக்கியன்' என்று அவர்கள் மனதில் நன்ருகப் படும்படி கூறுவதற்குள் என் நெஞ்சே வெடித்துவிடும் போல் ஒரு பாதையை உண்டாக்கியதே. வள்ளீ! ஐயோ பாவம். எசமான விச்வாசத்தின் முன் தன் கணவன் உயிரையும் த்யாகம் செய்யத் துணிந்து, எப்படி ஜோடித்து தன் வாயால், உள்ளம் நடுங்கப் பொய் கூறினள்.

எத்தனையோ குழப்பங்கள், பூசல்கள், சூதிகள் நடந்தும், முத்துவிற்கு மரண தண்டனை தப்பியதோடு, சிறைவாசமும் குறைந்ததே. அது நம் அதிர்ஷ்டம்தான். நம் அதிர்ஷ்டமா? தூ....இந்தப் பாவிக்கு அதிர்ஷ்டம் என்று வேறு ஒன்று உண்டா? உண்மையான ஊழியர்கள், மனதறிந்து த்யாகத்தீயில் குளித்து நம்மைக் காப்பாற்றியதை பகவான் தன் இரு விழிகளால் கண்டு கருணை மழை பெய்து கொடுத்த பலனே அது.

முத்து தன் தவறை கலவரமின்றி, ஒத்துக் கொண்டதாலும், குத்துப்பட்டவனுக்கு அதிக காயமில்லாததாலும், மிகவும் குறைந்த வருடங்களே சிறைவாசம் கிடைத்தது. இவ்வூர் சிறையிலேயே போட்டதும் ஒரு நன்மைக்குதான். இல்லாவிடில் அடிக்கடி போய் பார்த்து, அவ்வப்போது உள்ள நிலைமையை நம்மால் அறிந்து வர முடியுமா? முத்துவின் நடத்தையைப் பற்றிய குறிப்பில் நன்ருக எழுதியிருக்கிருர்களாம். இவனு இப்படிப்பட்ட கொலை குற்றம் செய்திருப்பான் என்று எல்லோரும் வியக்கிருர்களாம். அவர்கள் மனதில் ஒரு நன்மதிப்பு பெற்றுவிட்டான் முத்து. அதனுல் அவன் சிறையிருக்கவேண்டிய நாட்களை இன்னும் குறைத்து சீக்கிரமே விடுதலை செய்துவிடுவார்கள் என்று சதாசிவம் கூறுகிருர். அவர் ஊகத்தின்படியே நடக்க வேண்டும் என்று எத்தனையோ ப்ரார்த்தனைகள் செய்து கொள்கிறேன்.

நான் என்னவோ அடிக்கடி போகாவிட்டாலும், சதாசிவமோ முரளியோ, எப்படியோ ஒருவர் செல்கின்றனர். அடிக்கடி போனுலும் மரியாதைக் குறைவோடு வீண் சந்தேகமும் ஏற்படும். அவர்கள் போகும்போது அறிந்து கூறும் குறிப்புகளெல்லாம் மனதிற்கு நம்பிக்கை ஊட்டுகிறது.

நான் ஒரே ஒருதடவை சென்றிருந்தபோது பட்டபாடு! அப்பப்பா....முத்துவை கைதி உடையில் பரிதாபகரமான நிலையில் பார்த்ததும் என் குடல் கலங்கிவிட்டது. "ஐயோ முத்தூ உனக்கா இந்த கதி?" என்று அருகில் அந்த ஜெய்லர் மட்டும் இல்லாவிடில் அலறியிருப்பேனே.

ஆனல்... ஆனல்....மறுபுறம்? முத்து இந்த த்யாகம் செய்யாதிருந்தால் ..ரகுவின் பழியை ஏற்காதிருந்தால்.... நினைக்கும்போதே படுகுழியில் தள்ளுகிறதே. ரகுவல்லவா இந்த உடையுடன் தலையும், முகமும் மயிர்க்காடாய் மாறி, இந்தக் கம்பிகளைப் பிடித்தவாறு நிற்கவேண்டும். அப்போது என் மானம்!...கௌரவம்! குடும்பத்தின் அழியாப் பெயர்!... எல்லாம் கப்பலோடுமூழ்கி புதைந்தல்லவா போயிருக்கும்.

முத்தூ! நீ அப்போது நடந்துகொண்ட விதம்! என்னை எப்படி விசாரித்தாய்?. "அம்மா நான் முன்பிருந்த முத்து இல்லையம்மா. ரஞ்சன் ஐயா ஊருக்குப் போனதும், அவரோடேயே என் நல்ல குணம் போயிட்டது. நான் அயோக்கியனுயிட்டேன். கைதியம்மா நான் கைதி. எசமான் வீட்டவங்களெல்லாம் என்னைப் பார்க்க வரலாமா? அவ்வளவு யோக்கியதை எனக்கில்லீங்க" என்றல்லவா கூறினுய் முத்து. வீட்டிற்கு வந்து நான் எவ்வளவு நேரம் கதறினேன் தெரியுமா?

ரஞ்சனை ஊருக்கு அனுப்பிவிட்டு, உன்னை சிறையிலடித்துவிட்டு, ரகுவையும் ரேவதியும் தனியாக வேற்றூருக்கு அனுப்பிவைத்து நான்படும் வேதனையில், வள்ளியும், தன் அண்ணன் வீடு சென்றுவிட்டது என் கை உடைந்தார் போலல்லவா ஆகிவிட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக நீ குற்றம் செய்திருக்கமாட்டாய் என்ற உறுதியோடு சாராஜூவும், வாஸுவும் என்னை மரங்கொத்தி போலல்லவா துளைத்தார்கள். என் தடுமாற்ற நிலையையும் பார்த்து அவர்களுக்குச் சந்தேகம். இந்த சரோஜாவின் நச்சரிப்பைப் பொறுக்க முடியவில்லையே. பதில் கூறவும் தெரியவில்லையே. ரகுவையும் ரேவதியையும் அனுப்பித்த இரண்டு நாட்களிலேயே திரும்பிவிட்ட சரோஜா எப்படி கேள்விகளை அடுக்கினுள்.

"அம்மா! அன்று ரகு வந்திருந்தானே எதற்காக வந்தான். இப்போது அவனைக் காணவில்லை. நல்லவள் போலான ரேவதியும் சேர்ந்து காணப்படவில்லை. நீயோ எப்போதும் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிருய். என்ன

விஷயம்'' என்று ஒருநாள் துணிவுடன், உள்ளூர பயம் எழும்ப கேட்டேவிட்டாள்.

"நல்லவள் போலான ரேவதி என்கிருயே. அவள் நல்லவளாகவும் நடிக்கவில்லே. கெட்டவளாகவும் இருக்கவில்லே. எப்போதும் போல்தானே இருக்கிருள்'' என்று சுற்றி வளேத்தேன் எனக்கு உள்ளுக்குள் உண்மை விஷயத்தைக் கூறலாமா? வேண்டாமா? என்றல்லவா குழப்பம்.

"ஏனம்மா? நான் ஒன்று கேட்டால் நீ ஒன்று கூறுகிருய். அன்றெருநாள் அப்படித்தான், நான் பள்ளிக்குக் கிளம்பும்போது 'சரோ தூங்கு போ' என்ருய். வாஸு பால் கேட்டான் அப்போது நீ பழம் கொண்டுவந்தாய். ஏன் இப்படியெல்லாம் தடுமாறுகிருய்?'' என்று பெரிய கேள்வியைப் போட்டாள்.

"சரோ! என்னவோ கவலேதான். நீ ரகு ரேவதி எங்கே என்றுதானே கேட்டாய் சொல்கிறேன். ரகு இந்த ஊரிலுள்ள சிநேகிதர்களோடு சேர்ந்து கெட்டுவிட்டானல்லவா? அவனேத்திருப்ப ஒருவழியும் எனக்குத் தெரியவில்லே. கடைசியில் சதாசிவம், இந்த நண்பர்களிடமிருந்து பிரித்து வேறிடத்தில் வைத்து முயற்சிக்கலாம் என்ருர். அதனுல் சதாசிவம் தாத்தா ஊர் கருப்பஞ்சேரிக்கு அனுப்பினேன்'' என்றேன்.

"ஓஹோ! அவனுக்கு துணையாக்கும் ரேவதி?'' என்று கேட்டு ஒருமாதிரி பார்த்தாள். நான் ஆமாம் என்று தலேயசைத்தேன். இதோடு விட்டாளா? பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தப் பிறகு முத்துவின் செய்தியும் இவள் பாம்பு காதிற்கு எட்டிவிட்டது.

"அம்மா! நான் மாமா வீட்டிற்கு சென்றிருந்தபோது நம் ஊரிலே யாரோ மாரிமுத்து என்பவன் யாரையோ குத்திவிட்டதாகப் பத்திரிகையில் படித்தேன்......'' என்று கூறி இழுத்தாள்.

"உம்....அதற்கென்ன...'' என்றேன் உதறலோடு.

"அந்த மாரிமுத்து என்பது...நம்முத்துதான் என்று என் பள்ளிப் பெண்கள் கூறுகிருர்கள். பணத்திற்காக ஆசைப்பட்டு கொலே செய்ய துணிந்தவன் அவன். இந்த தடவை அகப்பட்டுக் கொண்டான். உங்கள் வீட்டிலும் இதற்கு மூன்பு நல்லவன்போல் நடித்து எத்தனே திருடிக் கொண்டானே? உன் அம்மாவிடம் சொல்லி கவனிக்கச் சொல்லு. அவன் மனேவி இன்னும் உங்கள் வீட்டிலிருக்கிருளே ஜாக்கிரதை என்றெல்லாம் சொல்கிருர்களம்மா.''

"அதற்கு நீ என்ன சொன்னுய்?"

"நான் சொன்னேன்: 'சீ...வள்ளி, முத்து இருவரும் நல்லவர்களாகத்தான் எங்கள் வீட்டிலிருந்தனர்' என்றேன். ஆனல் அவர்கள், உனக்கு ஒன்றும் தெரியாது. இத்தனை நாள் வீட்டில் ஒரு திருடன், கொலைகாரனை வைத்துக் கொண்டு எப்படி இருந்தீர்களோ? எங்களுக்குப் பயமாக இருக்கிறதும்மா என்கிருர்கள். அம்மா இதெல்லாம் நிஜம் தானு?" என்று கேள்விகளுக்கு புள்ளிவைத்தாள்.

"எல்லாம் நிஜம்தான். முத்து நம்வரையில் நல்லவனுக இருந்திருக்கிருன். இரவு வேளைகளில் இந்த வேலைகளை செய்வது நமக்குத் தெரியாது. அவனைக் காப்பாற்றஎந்த வழியிலும் முடியவில்லை. அவன் கையில் பணத்தையும், கத்தியையும் பார்த்து அவன் ஓடுவதற்குள் பிடித்துவிட்டார் களாம். நேரே பார்த்திருக்கும்போது நாம் என்ன சொல் வது?" என்று ஊராருக்குக் கூறும் அதே பல்லவியைத் துணிந்து கூறினேனே.

"அச்சச்சோ.... அப்படியா சேதி... ரகு வள்ளியை அடித்து அவள் குழந்தையைக் கொன்றதற்கே நாம் எவ்வ ளவு பாடுபட்டோம். முத்துவானல் இவ்வளவு பெரிய கொலை வேலைகளையே செய்கிருனு" என்று கூறிக்கொண்டே போய்விட்டாள். ஒருநாள் இப்படி ஒரு தர்க்கம். இதுபோல் திடீரென்று வந்து ஏதாவது கேட்பாள்.

வாஸுவிற்கு இவளைப்போல் கேட்கத் தெரியாதே தவிர சிறு சந்தேகங்கள் எழும்போது அவனும் வருவான். அடுத்தவீட்டு தாத்தாவிடம் அதனுக்கு அதிக ப்ரியம். அவ ரிடம்தான் நக்ஷத்திரம், தண்ணீர், பூமி என்று அவைகளைப் பற்றிய ஆராய்ச்சியில் பேச இறங்கிவிடுவான்.

நிம்மதியாக நானும் கருப்பஞ்சேரிக்கு போகலாமென் ருல், துடுக்கான குழந்தைகளை வேறெங்கும் விடவும் மனம் வரவில்லையே. எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு உலா வத் தொடங்கும் சமயம் ரஞ்சனின் கடிதங்கள் வந்து என்னை அனிச்சம் பூவைப் போலல்லவா செய்து விடுகிறது.

அனிச்சம் முகர்ந்தால் வாடும். ஆனல் 'ரஞ்சனிட மிருந்து கடிதம்....' என்ற சொல்லைக் கேட்கும்போதே.... ஐயோ! அவன் யார் யாரைப்பற்றி விசாரித்து எத்தனைக் கேள்விகள்கேட்டிருப்பானே...தெரியாது. செய்யும்பாவமே மலைபோல் குவிந்துகிடக்கையில் உள்ளமறிந்து, அவனுக்கு எல்லா கேள்விகளுக்கும் விடையை பொய் மயமாக எழுதிப் போடும் பாவம் வேறு எனக்கே வந்து சேர்ந்ததே. நான் பிறந்த வேளையின் பயன். இதற்கிடையில் 'ஊருக்குத் திரும்பிவிடுகிறேன்' என்று ரகு கூறுவதாக ரேவதியிட

மிருந்து கடிதம், என்ன செய்வது...ரகுவை அழைத்து வர லாமா?' என்று சிந்தனைப் புதரில் சிக்கித் தவித்துக்கொண் டிருக்கும்போது; "அடேயப்பா! என்ன யோசனை?....... என்ன யோசனை? பள்ளியிலிருந்து வந்து நானும் நிற்கி றேன் எத்தனை நேரமாய்" என்று சிரித்தவாறே இறந்த கால நினைவுகளிலிருந்து மீட்டாள் சரோஜா.

லக்ஷ்மி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு சோம்பலுடன் எழுந்து நின்றாள்.

"என்னம்மா! தூக்கமா...யோசனையா?..." என்ற சரோஜாவை உருட்டி விழித்தாள் லக்ஷ்மி. "தூக்கம்...ம்" என்றாள் காரத்துடன். சரோஜா பரிதாபமாக உதட்டைப் பிதுக்கினாள். அதற்கு அர்த்தம் அவளைக் கேட்டுத்தான் அறிந்து கொள்ள வேண்டும்.

வீட்டில் எத்தனை நேரம் அடைந்து கிடப்பது? உட் கார்ந்திருந்தே உடலெல்லாம் வலி எடுத்தது. அதனால் லக்ஷ்மி வீட்டின் பக்கவாட்டங்களிலிருக்கும் செடிகளி லுள்ள பூக்களைப் பறிப்பதற்காக கூடையுடன் நடந்தாள். "பாவம்! சரோஜாவிற்கு அழகாக உடையுடுத்தி, சண்டு பூவைத்து அலங்காரம் செய்து எத்தனை நாட்களாகி விட் டன.நம் கவலையிலும், குழப்பத்திலும் குழந்தையை கவனிக் கவேயில்லை. அலங்காரம் மட்டுமா? உணவில் கூடத்தான். எதைச் சாப்பிட்டார்களோ? எப்படி சாப்பிட்டார்களோ. சமையர்காரனுக்கு குழந்தைகளிடம் என்ன அக்கரை? காலையிலும் மாலையிலும் வந்து சமைத்து, பரிமாறிவிட்டுப் போய் விடுவான். அவன் வீடு திரும்பும் நேரத்திற்குள் யார் வந்தார்களோ அவர்களுக்குத்தான் உணவு கிடைக் கும். முன்போலா நம் வீடு இருக்கிறது" என்று லக்ஷ்மி பெருமூச்சுடன் கூறிக்கொண்டாள். பூக்கூடையுடன் அதைத் தொடுக்க அமர்ந்தாள்.

"அம்மா! எனக்கா இந்தப் பூவெல்லாம். ஐ" என்று ஆனந்தத் தாண்டவமாடினாள். 'இந்தப் பின்னல் போடு, அந்தப் பின்னல் போடு' என்று கொஞ்சினாள். இதுவே லக்ஷ்மிக்கு அமிர்தம் போல் இனித்தது. "ஆமாம் கண்ணு. உனக்குதான்" என்று சரோஜாவை வருடினாள். சரோ ஜாவிற்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

"என்ன சரோ! குஷியாக இருக்கிறாய். நான் வரும் போதெல்லாம் நீ தென்படுவதே யில்லையே. உன்னை பேட்டி காண ரொம்ப கஷ்டமாயிருக்கிறது"—இப்படிக் கூறிக் கொண்டு உள்ளே வந்தவர் சதாசிவம்தான்.

"ஏன் தாத்தா! என் பேட்டி எதற்கு? நான் என்ன பெரிய மந்திரியா? கவர்னரா? அல்லது சினிமா நடிகையா?

மேலும் என்னைப் பேட்டிக் கண்டு என்னிடம் பேச என்ன விஷயம் இருக்கிறது?''

''சரோ! சரோ! நீ யென்னம்மா பலே பேஷாய் பேசுகிறாயே, அதைக் கேட்கவே உன்னை பேட்டிக்காண வேண்டும். படுசுட்டி நீ'' என்று சரோசாவைத் தட்டிக் கொடுத்தார்.

"தாத்தா! நான் வெளியே போகவேண்டுமா என்ன? தட்டிக் கொடுத்து, தடவிக் கொடுத்து...ரொம்ப தந்திரக் காரர்தான்'' என்று நமுட்டு சிரிப்பு சிரித்தாள். சதாசிவமும் கொல்லென்று நகைத்தார்.

"சரோ! வாஸு கூப்பிடுகிறான் போலிருக்கிறதே'' என்றாள் லக்ஷ்மியும்.

''வாஸுவும், கூப்பிடுவான், வெங்காயமும் கூப்பிடும், போம்மா, உங்கள் பேச்சு எனக்கெதற்கு. திருப்பித் திருப்பி பழைய விஷயத்தையே தான் பேசுவீர்கள் சலிக்காமல். நீ சொல்வதற்கு முன்பே இதே நான் போய் கொண்டிருக்கிறேன்'' என்று பொய் கோபத்துடன் கிளம்பினாள். சரியாக தோழியும் அப்போது வரவே சந்தோஷத்துடன் சென்றாள்.

சதாசிவம் ஒரு கடிதத்தை லக்ஷ்மியிடம் கொடுத்தார். அது ரேவதியிடமிருந்து சதாசிவத்திற்கு வந்த கடிதம். என்ன? ரேவதி...சதாசிவத்திற்குக் கடிதமா?' என்று திணற வேண்டாம். கருப்பஞ்சேரி மண்ணின் போகம் அது.

சென்ற மூன்று மாதமாக, பலவித குணமுள்ள தோழிகளோடு அவ்வூரில் பழகி, ரேவதியின் குணம் ஒரு நிலையில் பண்பட்டு, இரும்பாய் இருந்த அவள் உள்ளம் கரும்பாய் மாறிவிட்டது. சதாசிவத்திற்குத் தானகவே கடிதம் எழுதினாள். அவரும், அவள் மனதிற்கு வருத்தம் கொடுக்கக் கூடாது என்று பதிலும் போட்டார். அதிலிருந்து கடிதப் போக்குவரத்து நடைபெற்றது.

"கடிதத்தைப்படி........எதற்கு? நானே கூறிவிடுகிறேனே. ஊரில் ரகு, 'நாம் வந்து மூன்று மாதமாகி விட்டது. நம் ஊரிற்கே போய் விடலாம். நான் எல்லோரையும் பார்க்கவேண்டும். கடிதம் எழுதுகிறாயா? இல்லாவிடில் எழுதாமலேயே பொய் சொல்கிறாயா. நானே எழுதிவிட்டு போய் விடுவேன்' என்று அடிக்கடி கேட்கிறானும். நீங்கள் சித்தியிடம் சொல்லி எதாவது ஏற்பாடு செய்யுங்கள்' என்று ரேவதி எழுதி யிருக்கிறாள்," என்றார் சதாசிவம்.

"எனக்கு வரும் கடிதங்களிலும் எழுதுகிறாள். இங்கு வந்தால் மறுபடியும் பழைய சிநேகிதங்கள் தொடருமோ?

என்றுதான் எனக்கு சந்தேகம். அதனுல்தான் யோசிக்கிறேன்''.

''தன் மனிதர்கள் என்று ஒருவரையும் பார்க்காது, ஒரு ஊரில் தனியாக இருப்பதும் கஷ்டந்தான். எத்தனை நாள் இருப்பார்கள் பாவம். மேலும் இங்கும் சில நாட்கள் வைத்து பார்த்தால் தான் அவன் கிலி தெளிந்திருக்கிறதா என்று தெரியும். அதனுல் அழைத்து வருவதே மேல்.''

''சரி. நீங்களே கடிதம் எழுதி விடுங்கள். நானே போய் இரண்டு நாள் தங்கிவிட்டு, அழைத்து வந்துவிடுகிறேன். மனிதர்களைப் பார்க்காது ஏங்குகிறுன் போலிருக்கிறது''.

''ஆமாம். நீங்களே போகலாம். இங்கு அழைத்து வந்து, சரிபடா விட்டால், உங்கள் அண்ணன் வீட்டிற்கு அனுப்பி வைக்கலாம். இப்படி நான்கு இடங்களுக்குச் சென்று, அந்தந்த சூழ்நிலைக் கேற்ப தன்னை அமைத்துக் கொண்டு, புத்தியை பலவிதத்தில் செலுத்துவதுதான் சிறந்தது.''

''சரி...'' என்றுள் லக்ஷ்மி.

''தாத்தா! உங்கள் வீட்டிலிருந்து வேலையாள் தேடிவந்திருக்கிறுன். யாரோ வந்திருக்கிறுர்களாம்''. என்று வாயிலிலிருந்த சரோஜா கூப்பாடு போட்டாள்.

''அப்போது...நான் வருகிறேனம்மா....'' என்று எழுந்தார் சதாசிவம்.

லக்ஷ்மி அவரை வழியனுப்பிவிட்டு, சரோஜாவின் மனம் குளிர அவளை அலங்கரிந்து நிற்க வைத்தாள். வாஸு அவளைப் பார்த்து ''அட! சரோஜா, ரோஜா மாதிரி மின்னுகிறுளே'' என்று கேலி செய்தான். லக்ஷ்மியும் தன் செல்வங்களை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

## அத்தியாயம் 20

### அதிர்ச்சி அளித்த மலர்ச்சி

''அம்மா! என்னை வெளியில் போகச் சொல்கிருயா....மாட்டேன் அம்மா...முடியாது. பயமாய் இருக்கிறதே....ஹா...'' என்று கூவி கண்ணைக் கெட்டியாகமூடிக்கொண்டான் ரகு.

''ரேவதி! அவன் சென்னுன் என்று நீயும் எழுதினுய், சதாசிவம் ஊரைக்கூடச் சுற்றிப் பார்க்க நேரமில்லாது, குழந்தைகளைத் தனியாக விட்டு வந்ததால் தங்கமுடியாமல் நானும் அழைத்து வந்துவிட்டேன். ரகுவோ இப்படி கத்துகிறுன், நடுங்குகிறுன்'' என்று கையைப் பிசைந்தாள் லக்ஷ்மி.

"ஊரிலிருந்தபோது, ப்ரமை பிடித்த மாதிரி இருந்தானே தவிர ஒரு தொந்தரவும் கிடையாது சித்தி. இந்த ஊருக்குத் திரும்பவே, பழைய நினைவு வந்து விட்டதோ".

"ரகு! எழுந்திரு. எதற்கு வீண் பயம். நீ எங்கும் போக வேண்டாம். ரேடியோவில் உனக்குப் பிடித்த புல்லாங்குழல் வாசிக்கிறார்கள். கேள்" என்று அவ்விடத்திலிருந்து கிளப்பினாள்.

"அம்மா! நான் முன்பக்கம் கூட வரமாட்டேன். என்னை விடு. அவன்...அவன்....ஆ...வந்து விடுவானா? ரேவதி எங்கும் போகாதே. என் பக்கத்திலேயே இரு" என்று கூறினான். அவன் உடல் பயத்தால் குலுங்கிக் கொண்டிருந்தது.

லக்ஷ்மிக்கு இருந்தகவலற்றோடு இது ஒரு புதிய கவலையாயிற்று. காலையில் சத்தம் செய்தாலும் ஊர் முழுதும் சந்தடியாக இருப்பதில் ஒருவருடையது தனியாக ஏடுபடாது. ஆனால் இரவு சத்தம் எல்லாவற்றையும் வெளிப் படுத்தி விடுமே! லக்ஷ்மி இதை நினைத்துத் தவித்தாள். ரேவதிக்கு நாம் ஏன் கடிதம் எழுதினோம் என்றாகி விட்டது.

ரகு பல நாட்கள் பழகிய வீட்டைக் கண்டதும்—அதுவும் அவன் நண்பர்கள் எல்லோரும் கூடி கும்மாளமடித்த அறைகளைக் கண்டதும் அந்த நண்பர்களின் முகமெல்லாம் அவன் மனக்கண்ணில் தோன்றித் தோன்றி மறைந்தது. அப்போதெல்லாம் அவன் நடுங்குவான். கூச்சலிடுவான். இரவு வேளைகளில் சரியாகத் தூங்குவதே கிடையாது. கண் மூடப்போகிறானா என்று லக்ஷ்மி தவம் கிடக்கும் சமயத்தில் அவன் உடல் கட்டிலிலிருந்து ஒரு முழம் தூக்கிப்போடும். உடனே தலை முதல் கால் வரை குலைக்கும். கண்களை மிரள விழித்து "அம்மா! அவர்களைப் போகச் சொல். நான் இனி அவர்களோடு சேரமாட்டேன். ஐயோ குத்திவிடுவார்கள்" என்று கூறி லக்ஷ்மியின் கையை கெட்டியாகப் பிடித்துக் கொள்வான். ரேவதி இங்குமில்லாது அங்குமில்லாது, நடுவில் திண்டாடுவாள்.

லக்ஷ்மிக்கு எல்லாவற்றிற்கும் நடுவேரேவதியின் மாற்றம் சிறிது தெம்பையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. அவள் நடை உடை பாவனைகளில் தலைகீழான மாற்றம். பேச்சில் எத்தனை இனிமை. நவநாகரீக நங்கையாய், உலாவின ரேவதி குடும்பப் பெண்ணாய் திகழ்ந்தது ஒரு அதிசயந்தானே. ரகுவிற்கு பூரண நிம்மதிபெற்று அவன் பயம் தெளியாவிட்டாலும், கருப்பஞ்சேரிக்குச் சென்றதில் ரேவதி ஒரு பெண்ணானாள் என்பது லக்ஷ்மிக்கு மிகவும் திருப்தியை அளித்தது.

முன்பெல்லாம் தான் அமர்ந்த இடத்தை விட்டு அசையாத ரேவதி இப்போது லக்ஷ்மிக்கு உதவி புரிவதோடு: தன் தங்கை தம்பியின் பராமரிப்பையும் தானே ஏற்று நடத்தினுள். சிநேகிதிகளையும், தன் விளையாட்டுகளையும் பற்றி ஒரு பேச்சும் பேசுவதில்லை. அவள் மனதில் நினைத்தால் தானே—பேசுவதற்கு? "சித்தி நீ ரகுவிடம் போ, நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று லக்ஷ்மியை அனுப்புவதோடு, ஒருநாள். "சித்தி! நமக்கெதற்கு, சமையல்காரன்? நிறுத்திவிடலாம். நானும் நீயும் போதாதா. நம் வீட்டில் அப்படி என்ன அதிக வேலை. சமையலும் ருசியாக இருப்பதில்லை. நான் எங்கு போகிறேன். உதவி செய்கிறேன் சித்தி'' என்றுள்.

இதைக் கேட்டதும் லக்ஷ்மிக்கு ஒரே அதிர்ச்சி. எதனுல்? ரேவதியா இப்படி பேசுவது என்றுதான். மௌனமாக ரேவதியைப் பார்த்தாள். ''ஏன் பேசாமல் இருக்கிருய். என் மீது நம்பிக்கை இல்லையா சித்தி, எப்படி நம்பிக்கை ஏற்படும். நான் செய்து காட்டுகிறேன். பார். நம் கைகால்கள் நன்றுக இருக்கையில் எதற்கு வீண் செலவு?'' என்று மறுபடியும் தானே செய்வதாக வாக்குக் கொடுத்தாள்.

லக்ஷ்மி ரகுவை மறுபடியும் எங்காவது அனுப்பி வைக்கலாம் என்றே தீர்மானித்து விட்டாள். ஆனுல் "எதற்கும் சில நாட்கள் பார்க்கலாம். உடனே மாற்றக் கூடாது'' என்று சதாசிவம் கூறி, அதை ரேவதியும் ஆமோதித்ததால் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். ரகு எங்காவது வெளியில் சென்றுல் சுற்றுப்புறத்தைப் பார்க்காது, கண்களை மூடி உடம்பை வளைத்துத் தன்னை மறைத்துக் கொண்டான்.

"ரேவதி! யாரையும் பார்க்காது இப்படி இருக்கிருனே.'' என்று லக்ஷ்மி அடிக்கொருதரம் கூறி அங்கலாய்த்தாள்.

''என்ன செய்வது சித்தி. சில நாட்கள்பொறு, அவன் அங்கு என்னை ஊருக்குப் போகலாம் என்று நச்சரித்ததைப் பார்த்தால் நான் என்னவோ என்று நினைத்தேன். என்ன இருந்தாலும் ஒரு கிராமத்தில் இத்தனை மாதம் இருந்ததே வியப்புதான். க்ராமத்தில் இருப்பது கஷ்டம் சித்தி. அதனுல்தான் நான் எழுதினேன். மேலும் உங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென எண்ணம் வந்து விட்டது. எனக்கும் அங்கு பிடித்துவிட்டாற் போல்தான் இருந்தது'' என்றுள் ரேவதி.

சாதாரணமாக ரகு இருக்கும் அறைக்கு லக்ஷ்மி போனாள். அங்கு ரகுவைக் காணவில்லை. ஒருவேளை மேலே சென்றிருப்பானோ என்று ரேவதியிடம் "ரகு மேலே இருக்கிறானா பார்" என்றாள். ரேவதியிடமிருந்தும் "காணவில்லை" என்ற பதில்தான் வந்தது. மேலும் கீழும் ஒவ்வொரு அறையாக ஓடி ஓடித் தேடினர். லக்ஷ்மியால் நிற்கக்கூட முடியவில்லை. ரேவதியின் நாடி அடிக்கும் வேகத்தையோ கூற முடியாது. எங்கு சென்றிருப்பான் ரகு? தோட்டத்திற்கு வா என்றால் கூட நடுங்கும் ரகு எங்கே?

"அம்மா! அம்மா!!' என்று மூச்சுத் திணற ஓடி வந்தாள் சரோ.

"என்ன சரோ!" என்று ரேவதி ஓடி வருவதற்கு முன்பே "ரகு....ரகு....அங்கே தோட்டத்தில் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருக்கிறான்", என்று கையை நீட்டி அவனிருக்கும் திசையைச் காட்டினாள். அங்கு ஓடிய லக்ஷ்மி. "ரகு" என்று அழைத்தாள். பதிலே இல்லை.

"ரகு!"...

தூங்குகிறானோ. எழுப்பினால்? அலறுவானோ? செய்வதறியாது லக்ஷ்மி உட்கார்ந்து விட்டாள். சரோஜா பயத்தால் விழித்தவாறு அருகில் வந்து நின்றாள். "அம்மா... இ...இவன், ஏன் இப்படி—" ஏதோ கேட்க ஆரம்பித்து தன் வாயைத் தானே பொத்திக் கொண்டாள். "அம்மா... ரகு ஊரிலிருந்து...வந்தது முதல் ஏன் நடுங்குகிறான், கத்துகிறான்? இப்படி வந்து தோட்டத்தில் பூச்சிகள் வருமிடத்தில் படுத்திருக்கிறான். வெளியேயும் போவதில்லை"என்று சற்று நிறுத்தி நிறுத்தி கேட்டாள்.

"அவன் சிநேகிதர்களோடுஎங்கோ வெளியூருக்குப் போயிருக்கும்போது எதையோக்கண்டு பயந்துவிட்டானாம். அதிலிருந்து சம்பந்தமில்லாமல் உளறுகிறான். நீயும் பயந்து..."

"அ...எனக்கு ஒன்றும் பயமில்லை...அம்மா! என் சிநேகிதியின் தாத்தாவிற்கு மந்திரம், தந்திரம், வேப்பிலை அடிக்கிறது, இன்னும் என்னவெல்லாமோ தெரியும். நான் போய் ஒரு நிமிடத்தில் அழைத்து வந்துவிடுகிறேன்"— கூறிக்கொண்டே மின்னல் வேகத்தில் ஓடிவிட்டாள்.

லக்ஷ்மி கத்தவும் முடியாது, ஓடவும் முடியாது தவித்தாள். 'ஐயோ! யாரை அழைத்து வந்து ஊரைக் கூட்டப் போகிறதோ. என் கதி என்ன ஆகும்'—எதையும் நினைக்க முடியாது நெஞ்சு உலர்ந்து விட்டது.

வொரு ஸ்தானத்திலும் ப்ரஸ்தாரம் செய்து மேல் ஸ்தாயி எட்டி பஞ்சமம்வரையிலான சஞ்சாரம் ப்ரம்மானந்தமாக நடந்துகொண்டு இருந்த சமயம் இந்த சலசலப்பைக் கண்டு வித்வான் பாடுவதை நிறுத்திவிட்டு "என்ன இது! ஏன் இப்படி பரபரப்பு! சங்கீதம் ரசிக்கவில்லையா?" என்று கேட்டார்.

அந்த சமயம் நம் தேசத்தின் பிதாவாய் விளங்கிய த்யாக மூர்த்தியான மகாத்மா காந்தீ அவர்களுக்கு உடல் நிலை சரி இல்லாமல் கவலைக்கிடமாக இருக்கிறது என்ற செய்தி தீபோல் பரவி மக்களின் இதயங்களில் பதிந்து வாட்டிக் கொண்டே இருந்தது. தேசபக்தியோ, காங்கிரஸ் பக்தியோ ஒன்றுமே இல்லாத பிரிட்டிஷாருக்கு அடிமையாக இருந்த சில உத்தியோகஸ்தர்களுக்குகூட மகாத்மாவின் நிலை கேட்டு 'ஐயோ அந்த மகான் பிழைக்கவேண்டுமே' என்ற அனுதாபம் உண்டாகி விட்டது என்றால் தேசத்தின் அன்பில் ஊடாடிக்கொண்டு இருக்கும் மனிதர்களுக்கு மகாத்மாவிடம் உள்ள அன்பை விவரிக்க முடியுமா? நிரம்ப தீவிரவாதிகளாக இருந்த சில காங்கிரஸ்காரர்கள் மகாத்மா இந்த நிலையிலிருக்கும்போது கச்சேரியும், கேளிக்கையும்கூட வைக்கலாமா என்று பேசிக்கொண்டார்கள். அந்த நிலையில்தான் அன்று மாலை வந்த பத்திரிகையில் 'மகாத்மாவின் உயிருக்கு பயமில்லை. கவலைக்கிடமான நிலை மாறிவிட்டது. இனி பிழைத்துக்கொள்வார் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள் என்ற செய்தி கொட்டை எழுத்துக்களில் ப்ரகாசத்துடன் ஜ்வலித்து, மக்களின் மனக்கவலையைப்போக்கி புத்துணர்ச்சியையும் பரபரப்பையும் அளித்தது. அதுதான் அந்த சலசலப்பிற்குக் காரணம்.

இந்த விஷயம் பாடகருக்குத் தெரிந்ததுதான் தாமதம். அடுத்த க்ஷணமே பரம குஷியுடன் பிடில் ம்ருதங்கத்தைகூட எதிர்பார்க்காமல் "காந்தியோ பரமா ஏழை சன்யாசி" என்ற சிந்து பைரவிராக தேசிய பாட்டை சபையே கிடுகிடுத்து விடும்படி தம்முடைய அழகான த்வனியில் பாடி முடித்ததை இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது. அந்த நிமிடம் எழுந்த கரகோஷத்தின் ஒலி வானத்தை எட்டிவிட்டது என்றே சொல்லலாம், அப்பாடலைத் தொடர்ந்து "ராட்டினமே காந்தி கை பாணம் நாளும் நம்மை காக்கும் ப்ரமாணம்" என்ற பாட்டையும் பாடி முடித்ததும் சபையில் கொந்தளித்த ஆனந்தமும், உத்சாகமும் எழுத்தில் எழுதி அடங்காது. பத்திரிகை ப்ரசாரங்கள், ப்ரசங்கங்கள் கொடுக்கும் பலனைக் காட்டிலும் அந்த இளம் வித்வான் பாடிய பாடலின் உணர்ச்சி பல உத்யோகஸ்தர்களை நன்றாக மாற்றிவிட்டது. கச்சேரிகளில் தேசிய பாடல்களை பாடும் முறையை கொண்டுவந்ததே இந்த வித்வான்தான். இவரை யார் என்று நினைக்கின்றீர்கள்? நம்நாடு செய்த பாக்யத்தால் சங்கீதக் களஞ்சியமாகப் பிறந்து புகழ் சிகரத்தில் ஆரோகணித்துவரும் நம் **அரியகுடி ராமாநுஜ ஐய்யங்கார் அவர்கள்தான்.** அத்தகைய ஐயங்கார் பல்லாண்டு பல்லாண்டாய் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

★

Jaganmohini (Nov. 1957) Regd. No. M. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண
முறைகள்

அணா 8.
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

## வை.மு. பத்மினி

ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப் ணம்
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3-8

ப்ர.ப. அண்ணங்க
ராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை 1-0
அபூர்வ
ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.